# ஆத்திசூடிக் கலங்கரை விளக்கம்



இரா. இளங்குமரனார்

# ஆத்திசூடிக்
# கலங்கரை விளக்கம்

இரா. இளங்குமரனார்

**திருவள்ளுவர் தவச்சாலை**
*திருவளர்குடி (அல்லூர்)*
*திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101*
*தொலைப் பேசி : 0431-2685328*

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | **ஆத்திசூடிக் கலங்கரை விளக்கம்** |
| ஆசிரியர் | இரா. இளங்குமரன் |
| மொழி | தமிழ் |
| பொருள் | இலக்கிய விளக்கம் |
| முதற் பதிப்பு | மே 2013 |
| பக்கம் | viii + 72 = 80 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 13.7 மேப்லித்தோ |
| அளவு | 1/8 |
| படிகள் | 1200 |
| விலை | உருபா : 40 |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் தவச்சாலை<br>அல்லூர் - 620 101,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- **திருவள்ளுவர் தவச்சாலை**
  அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

## பொருளடக்கம்


| கலங்கரை விளக்கம் இலங்கிய வகை | பக்கம் |
|---|---|
| 1. அறஞ்செய விரும்பு | 1 |
| 2. ஆறுவது சினம் | 6 |
| 3. இயல்வது கரவேல் | 10 |
| 4. ஈவது விலக்கேல் | 14 |
| 5. எண்ணெழுத்து இகழேல் | 17 |
| 6. ஏற்பது இகழ்ச்சி | 22 |
| 7. ஒப்புரவு ஒழுகு | 27 |
| 8. கூடிப் பிரியேல் | 32 |
| 9. கேள்வி முயல் | 36 |
| 10. கைவினை கரவேல் | 40 |
| 11. கோதாட்டு ஒழி | 44 |
| 12. சான்றோர் இனத்திரு | 49 |
| 13. சோம்பித் திரியேல் | 53 |
| 14. தூக்கி வினைசெய் | 57 |
| 15. பீடு பெற நில் | 62 |
| 16. மாற்றானுக்கு இடம் கொடேல் | 67 |

# கலங்கரை விளக்கம் இலங்கிய வகை

2008 இல் யாழ்ப்பாண அகராதி வெளியிடத் திருமிகு கோ. இளவழகனார் அழைப்பில் உடன் சென்றேன். செம்மடுப் பதிப்பக வெளியீடு அது. அற்றைக்கு 164 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தது யாழ்ப்பாண அகராதி. அதன் மீள்பதிப்புக் கொழும்பிலும் யாழ்நகரிலும் வெளியிடத் திட்டமிட்டிருந்தனர்.

எங்கும் தணிக்கை! தமிழர் எவரும் சிறை! என்னும் நிலையிலும் தடைகளைக் கடந்து கொழும்புத் தமிழ்ச் சங்கப் பேரரங்கம் நிரம்பி வழிய வெளியீடு நிகழ்ந்தது. ஆடவர் மகளிர் பேராசிரியர்கள் முதுவர் என இலங்கிய ஆர்வக்கிளர்ச்சிக் கூட்டம் அது. என் பொழிவு, நூல் வெளியீட்டு வாய்ப்பின் அருமையும் தேவையும் பற்றியது. "ஈழந்தந்த இனிய தமிழ்க் கொடைகள் இவை இவை" எனவும், "தமிழை வளர்த்த, காத்த சான்றோர்கள் இவரிவர்" எனவும், "இவ் யாழ்ப்பாண அகராதிக் குழந்தை 164 ஆண்டுகளின் முன் பிறந்தது. இன்று புதுப் பிறவி எடுத்துப் பொலிவுறுகின்றது" எனவும் விளக்கிக் கூறினேன். வெளியீடு நிகழ்ந்தது. நூல்கள் வெளியீட்டின் போதே பெருகச் செலவாயின.

எங்கள் யாழ் வெளியீட்டுத் திட்டத்திற்கு, "தடை, தடை" என்றால், எப்பொழுதும் எதுவும் நேரலாம் என்னும் நிலையில், வவுனியா வரை சென்று பன்மணிப் பொழுது காத்து முயன்றும் இறுதியில், "செல்ல முடியாது; உயிர்க்குப் பாதுகாப்புக் கூறமுடியாது; இந்திய நாட்டில் இருந்து வந்த நீங்கள், அங்கே செல்ல நாங்கள் இசையோம்" என மறுக்கப்பட்டு மீளவே முடிந்தது. அன்று வவுனியாவில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 13 பேர் சாகடிக்கப் பட்டிருந்த நிலை!

மீண்டும் கொழும்பு திரும்பினோம். வெளியே செல்ல இயலாது. சுற்றிப் பார்க்கவா வந்தோம்! சுற்றிப்பார்க்க விடுவரா? தமிழரையெல்லாம் பூண்டோடு அழிப்பதே நோக்கமாகச் செயல்பட்ட அவ்வெறியர் நாட்டில் உலவ இயலாமல் வீட்டுள் தங்கி உண்டு ஓய்வு கொண்டு வறிதே பொழுதைக் கழிக்க இயலாமல், **ஆத்திசூடிக்கு 'அகல் விளக்கு'** என

ஒரு தொடருக்கு ஒருபக்கம் எழுதிமுடித்தேன். **தமிழ்மண் பதிப்பகம்** வெளியிட்டது. அந்நூலை அன்பர் திரு. இலா. சுந்தர் அவர்கள் **மலையகம்** கொண்டு வந்திருந்தனர். என் எண்ணம் அந்நூல் மேல் மீளவும் படிந்தது. 12 தொடர் மணிகளைத் தேர்ந்தேன். அகர முறையில் அகல உரையிலும் அகல உரையாக வரையலாம் எனத் தீர்மானித்தேன். அன்றன்று நிகழ்வை எழுதுவது என்றும் திட்டம் விரிந்தது. சில தனிக் கட்டுரைகள் எழுதினேன். இரண்டு முழு நாள்கள் இடையே ஓய்வாக வாய்த்தன. அப்பொழுதை **ஆத்திசூடிக்கு** விரிவுரை எழுதச் செலவிட்டேன். 12 கட்டுரைத் திட்டத்தில் தொடங்கிய யான் 16 கட்டுரை ஆக்கினேன். **'ஆத்திசூடிக் கலங்கரை விளக்கம்'** எனப் பெயர் சூட்டினேன். அகல்விளக்கினும் விரிந்தது; உயரத்தே நிற்பது; கலங்கள் திசைமாறா திருக்கவும், அவற்றைத் தன்னிடம் அழைக்கவும் அமைக்கப்பட்டது.

> **"இலங்குநீர் வரைப்பில்**
> **கலங்கரை விளக்கம்"**

எனப் பண்டே கூறப்பட்ட பெருமையது.

108 அறவுரைகளில் 16-ஐத் தேர்ந்தெடுப்பானேன்? திருக்குறள் போல் பொதுமையறம் பேசுவன இவை. இவ்வாறு கூறுவன பிறவும் உளவாயினும் அவரவரே விரித்துக் கொள்ளத் தக்கவை. அகல் விளக்கு விரிவே போதும் என்பவை. ஆதலால், விரிக்கப்படவில்லை.

முந்தை உரையாளர் கண்ட உரைக்கு இவ்வுரை புத்துரை போலச் சில அமைந்தவை. அவர் பார்த்த பார்வையினும் இன்னொரு பார்வைக்கும் இடம் உண்டு என அமைந்தவை. இக்கால நடைமுறை வாழ்வுப் பார்வைக்கு அத்தொடர்கள் ஆக்கமாக இருப்பவை எனப் பலவகையால் இக்கலங்கரை விளக்கத்தைக் கற்பார் எண்ண வைக்கும் இவ்விரிவு.

இப்படியெல்லாம் கருதியிருப்பாரா ஔவையார் எனச் சில விளக்கங்களைக் கண்டு வினவுவார் உளராகலாம். மூலத்தை

மாற்றாமல் சிதைக்காமல் உரைகொள்ளல் உரிமை! அவ்வுரைப் பொருள் காலம் கடந்தும் காப்பரணமாக அமைவது காட்டும், நூலின் பெருமையாமே அன்றி நூலுக்கு மாறானது ஆகாது.

இளையர்க்கென எழுதப்பட்ட ஆத்தி சூடியில் இவ்வாய்வுகளை ஏற்றல் தகுமா? எனின், எளிமையாக இளமையில் ஓதச் சொன்ன நூலேயன்றி, இளையர்க்கே உரிய பொருளமைந்த நூலன்று ஆத்தி சூடி. அதனை அகல்விளக்கு முன்னுரையிலேயே வரைந்தேன்.

"இளையவரை நோக்கி மட்டுமே இந்நூலைச் செய்தார் அல்லர். இளமையில் கற்றுக் கொள்ளத்தக்க வகையில் செய்தார் என்பதே தகும். ஏனெனில்,

"அஃகம் சுருக்கேல்"
"ஙப்போல் வளை"
"மண்பறித் துண்ணேல்"
"தையல் சொல் கேளேல்"
"பூமி திருத்தியுண்"
"மெல்லினல்லாள் தோள் சேர்"
"மைவிழியார் மனை அகல்"

போன்றனவும் வேறு சிலவும் வளர்ந்தவர்க்கே கூறத்தக்கனவாம். ஆதலால், பொது அறம் கூறினார் எனவே தகும்" என்பது அது.

**இதனை எழுதத் தூண்டியது கலைத்தோன்றல் திரு. இலா.சுந்தர் அவர்கள் மலையகம் வரும்போது ஆத்திசூடி அகல் விளக்கை அவரே எடுத்துக் கொண்டுவந்தது.**

**மலேசிய சைவ நற்பணிக் கழகத்தின்** வழியே 12.12.2011 ஆம் நாள் **"ஔவையார் அறநெறி"** என்னும் தலைப்பில் பொழிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தூண்டல் துலங்கலாக வாய்ப்புச் செய்தது மலையகத்திற்கு என்னை நான்காம் முறையாக அழைத்து உண்டியும் உறைவும் உதவுதலைத் தம் பேறாகக் கொண்டுள்ளவர், மாரியப்பரும் வெற்றியம்மை அவர்களுமாவர். ஆதலால், அவர்கள் மலையகம்

அழைத்த கொடையே, இக்கலங்கரை விளக்க எழுத்துக் கொடை என்று கூறி நன்றி பாராட்டுகிறேன்.

**"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்டு**
**என்னாற்றும் கொல்லோ உலகு"**

என்பது வள்ளுவம். 'தமிழ் நெறி வாழ்வியல் இயக்கம்' கண்டவர் மாரியப்பர் என்பது சுட்டத்தக்கது.

இந்நூல் தமிழ் கூறு நல்லுலகில் உலாக் கொள்ள உதவுபவர் நெய்வேலிப் பேரன்பர் தாமோதரனார் தம் பெற்றோர் பெயரில் பாலம்மாள் குமரசாமி அறக்கட்டளை அமைத்தவர், தவச்சாலைப் புரவலர், என் நூல்கள், சில அறக்கட்டளை வழி வெளிவர முன்னும் உதவிநின்றவர் அவர். அவர்க்கும் அவர் இணையர் முதல் குடும்பத்தவர் அனைவர்க்கும் நன்றியுடையேன்.

என் எழுத்துப் பணிக்குப் பேருதவியாம் வகையில் உழுவல் அன்புடனும் உரிமை நண்புடனும் கைம்மாறு கருதாப் பெருந்தகைமையொடு தொடர்ந்து பல்கால் மெய்ப்புப் பார்த்து உதவும் பெருமகனார் முனைவர் திரு.பி.தமிழகனார் அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தினர்க்கும் உள்ளார்ந்த நன்றியுடையேன்.

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

# 1. அறம் செய விரும்பு

ஆத்தி சூடியின் முதல் தொடர் தமிழ் எழுத்துக்களின் முதல் எழுத்து ஆகிய அகர எழுத்தே ஆகும். அதற்குப்பின்னரே ஆ,இ,ஈ என வரிசையாகக் கூறினார். திருவள்ளுவர் 'அகரம்' என்றே தொடங்கினார். திருக்குறளுக்கு அமைந்த தலைப்பெயரே 'அறம்' என்பதாம். அறன் வலியுறுத்தல் என்னும் அதிகாரப் பெயரும், அறத்துப் பால் எனப் பாலின் பெயரும் முப்பால் ஊடகமும் அறமே ஆகும் என்பதை விளக்கும்.

ஔவையார் ஆத்தி சூடியில் '108' இருசீர் ஓரடிப் பாடல்களை - குறளடிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

வள்ளுவர் அறத்தை மனப் பொருளாகக் கொண்டு சொற்பொருள் ஆக்கி, அறப் பொருளாக வளர் நிலையில் சென்றார்.

ஔவையாரோ அறத்தைக் கொடைப் பொருளாக்கிக் கொண்டார். அறம் வேறு; கொடை வேறு. இதனை அறம் கூறிய வள்ளுவர் ஈகை என்றோர் அதிகாரமும் கூறியமையால் அறியலாம். ஔவையார்,

**"ஈதல் அறம்"; தீவினைவிட் டீட்டல் பொருள்**
**காதல் இருவர் கருத்தொருமித்து – ஆதரவு**
**பட்டதே இன்பம்; பரனை நினைந் திம்மூன்றும்**
**விட்டதே பேரின்ப வீடு"**

என்பதால் ஈவதை அறம் ஆக்கியதும்; முப்பாலை நாற்பால் ஆக்கிக் கொண்டதும் விளங்கும்.

"அறம், பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே" என்ற கால நிலையில் இருந்தவர் அவர். ஆதலால், அறம் செய விரும்பு என்றார். 'அறம் விரும்பு' என்பதே வள்ளுவர் வழியது. இது பிற்காலத்தவர் வழியது.

அறங்களை முப்பத்திரண்டாக்கியவர்கள் காலம் அது. தருமம் என்பது தருவது. அஃறிணையில் இயங்காத் திணை, இயங்கு திணை இரண்டும் தருவனவே.

மண் தரும் கொடை எவ்வளவு? மாடு தருவது குறைந்ததா? மரம், வேர், பட்டை, இலை, பூ, காய், கனி முதலியவற்றைத் தருவதால் தானே 'தரு' எனப்பட்டது. ஆனால், கொடுக்கும் கொடை, ஈகை என்பவை அறிவறிந்த மாந்தன் கையால் எடுத்து வழங்குவதும், தன்னையே ஈகம் செய்வதும் தேடிவந்து கொடுப்பதாம்; அவை தேடி எடுத்துக் கொள்ள உள்ளவை யாகும்.

ஔவையார் ஆத்தி சூடியில் கூறிய 108 இல் இவ்வொன்றையே கட்டளையிடாமல் கனிவுடன் விரும்புமாறு தூண்டுகிறார். வேறு வகையில் சொன்னால் ஆணையிடுகிறார், மற்றவற்றை. இதனை வேண்டுதலாச் சொல்கிறார்.

பாருங்களேன்: **"ஆறுவது சினம்"**
**"இயல்வது கரவேல்"**
**"ஈவது விலக்கேல்"**

இப்படித் தொடர்ந்து முடிவு வரை பாருங்கள்! அனைத்தும் ஆணை மொழிகளே. இதனை மட்டும் ஏன் வேண்டுகையாகச் சொன்னார்?

ஒரு செயலைச் செய்ய முதல்முதலாக வேண்டுவது விருப்பமே! விளையாட்டாகட்டும், வேலையாகட்டும், உண்ண வாகட்டும், பருக ஆகட்டும், நட்பாட ஆகட்டும் விரும்பாமல் ஆகாதே!

விருப்பமே இல்லாமல் செய்ய முடியுமா?

குதிரையைத் தொட்டியருகேதான் கொண்டு போய் விடலாம்.

குடிப்பது அது விரும்பினால் தானே! வலிந்து குடிக்க வாயைத் தள்ளினாலும் குடியாமல் உதைக்கவும் செய்யுமே!

ஒரு குழந்தை ஓடி வந்தது. ஏதோ சொல்ல வருகிறது என எண்ணி நின்று அதனைப் பார்த்தேன். 'சேவை' என்பது என்ன என்றது. ஏனெனில், தவச் சாலைக்குக் கீழ்பால் உள்ள நிறுவனத்தின் பெயர் 'சேவை' என்பது. அதனால், தெரிந்து கொள்ளுதற்குக் கேட்கத் தூண்டலாகியுள்ளது என்பதை அறிந்தேன்.

"பாப்பா, நீ தவச் சாலைக்கு நடந்துவந்தாய் வரும் வழியில் கல்லோ முள்ளோ கிடக்கிறது. அதை நீ பார்த்துவிட்டாய். யாராவது பாராது வந்தால் கல் தட்டிவிடும், முள் குத்திவிடும் என்று நினைத்தால் அதற்குப் பெயர் சேவை" என்றேன்.

'நினைத்தாலே சேவையாகிவிடுமா?' என்றது குழந்தை. "ஆம்! நினைக்கவே இல்லையானால் செய்ய முடியாதே" என்றேன். சிந்தித்தது! ஆத்திசூடி என்று ஒரு நூல். ஔவைப்பாட்டி செய்தது. அதில் எடுத்த எடுப்பில் 'அறம் செய விரும்பு' என்று தான் கூறுகிறார் என்றேன். மகிழ்வாக ஓடியது.

படிக்கவும், கேட்கவும், செய்யவும் முதலாவது வேண்டியது விருப்பமே! அதனால் பட்டறிவு மிக்க பாட்டி அறஞ்செய் என்று கூறாமல் அறஞ்செய விரும்பு என்கிறார்.

அறங்கள் சிலவற்றை ஔவையார் கூறுகிறார்.

**"ஐயம் இட்டு உண்"** என்பது ஒன்று. எவராவது வயிற்றுக்கு ஏதும் உண்ண இல்லை பசிக்கிறது என்று வந்தால் அவருக்கு உணவு தந்து நீயும் உண்பாயாக என்கிறார். (9)

**"அஃகம் சுருக்கேல்"** என்கிறார் (13)

அஃகம் என்பது தவசம், பயறு முதலிய உணவுவகை. உழவர்கள் தம் தொழிலால் மக்களுக்கு உணவுத் தட்டுப்பாடு வாராவகையில் உணவுப் பயிர்களை விரிவாகச் செய்து பசிநோய் இல்லாதவாறு காக்கவேண்டும். ஆட்சியாளர்கள், உழவர்கள் வேண்டும் உதவிகள் எல்லாமும் தட்டுப்பாடு இல்லாமல் செய்யவும் வேண்டும். உழவன் உணவால்

உயிர்களைக் காக்க வேண்டும் என்றால், அவன் தன் தொழிலை எத்தகைய தட்டுப்பாடும் முட்டுப்பாடும் இல்லாமல் செய்யவும் உதவ வேண்டும் என்பதாம்.

பருவத்தே உழவன் பயிர் செய்ய வேண்டும் எனின், ஆள்வோர் உழவனுக்கும் பருவத்தே உதவிகளைச் செய்ய வேண்டும் என்பது கட்டாயமாம்! உழவன் (நாற்று) முடி நடாவிட்டால் அரசன் தலை முடி என்ன செய்யும்! ஏர்க்களம் பொலிவாகாவிட்டால், போர்க்களம் பொலிவாமா? அவன் கோட்டைக்குத் தவசம் வராவிட்டால், அரசன் கோட்டை என்னாம்? என்று கம்பர் **ஏர் எழுபது** என்னும் நூலில் வினாத் தொடுக்கிறார்! உழவன் கையே **'திருக்கை'** என்கிறார். உழவன் செயலற்றால் நோன்பு கிடக்கும் துறவியும் வாழமுடியாது என்பார் திருவள்ளுவர்.

ஒன்றைப் பார்த்துப் பார்த்தபடி சொல்லாமல் மாற்றிச் சொல்லி மாறாத் துயராக்கவிடாதே என்பதைக்

**"கண்டொன்று சொல்லேல்"**

என்கிறார் ஔவையார். அது சொல்லறமும் செயலறமும் கூடியதாம் (14)

"தந்தை தாய்ப்பேண்" என்பவரும் ஔவையார் (20) பெற்றோரைப் பேணல் பிள்ளைகளின் கட்டாயக் கடமையாம் அறம் அல்லவா! மன்று பறித் துண்ணேல் என்பது ஔவையார் கூறும் மற்றோர் அறம். மன்று மன்றம் என்பவை ஊர் காக்கும் அவையம். அம்மன்றத்திற்குத் தலைவனாக - அறங்காவலனாக - இருந்தால், அவன் அம்மன்றின் பொருளைக் கொள்ளை - யடித்தும், கரவாகத் திருடியும் தானும் தன்குடும்பமும் வாழ்வதற்கு வகை செய்து விடக்கூடாது என்பது இதன் பொருள். முடிமன்னர் ஆட்சியினும் மக்களாட்சிக்குக் கட்டாயம் சொல்ல வேண்டியது மட்டுமில்லை; கண்காணித்துத் தண்டிக்கவும் வேண்டிய அறம் அல்லவா!

**"கெடுப்பது ஒழி"**

என்பது ஔவையார் கூறும் இன்னோர் அறம். உனக்கு வேண்டாதவர் என்பதற்காக - உன் தன்னலத்திற்குத் தடையாக - ஒருவர் இருக்கிறார் என்பதற்காக - அவரை எவ்வகையிலாவது கெடுக்க வேண்டும் என்று எண்ணும் எண்ணத்தை - கெடுக்கும் செயலை - ஒழித்துவிடுவாயாக!

அவரைக் கெடுத்தால் உன்னைக் கெடுக்க ஓராள்வரும் என்பதை எண்ணி, கெடுக்கும் எண்ணத்தை விடு என்கிறார். வள்ளுவர் கூறும் அறம், மனத்தில் களங்கம் இல்லாமையே உயர்ந்த அறம் என்பது. பொய்யாமையும் அறமே. அதனினும் கொல்லாமை தலையாய அறம் என்பார்.

யான் கூறும் அறங்களைப் படித்தோ கேட்டோ பயனில்லை; அவ்வறத்தைச் செய்ய விரும்புவதும், விரும்பிய படியே செய்வதுமே அறம் என்பதையே,

**"அறம் செய விரும்பு"**

என்றார் ஔவையார் என்க.

❖❖❖

## உ. ஆறுவது சினம்

உயிர்களின் பொது நோக்கு, துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் ஆகும். விருப்பும் வெறுப்பும் கடந்தநிலை வேறாம். பொதுநிலை இதுவாம்.

பறவைகள், கோழிகள், ஆடு மாடுகள், மான்கள், யானைகள் ஆகியவை சண்டை போடுதலை நாம் காண்கிறோம்.

அவற்றின் தேவைகள் குறைவானவை. வள்ளலார் கருத்துப்படி, அருந்துதல் பொருந்துதல் உடைய பிறப்புகள்!

மனிதன் நல்லது கெட்டது, வேண்டியது வேண்டாதது, சேமித்துவைப்பது, அடக்குவது, வீரம் காட்டுவது, புகழ் பெறுவது என்றெல்லாம் எண்ணம் உடையவன். அவன் உணர்வுக்கும் ஆளுமைக்கும் தடை ஏற்படும்போது சினம் உண்டாதல் அவன் இயல்பாயிற்று.

சினம் என்பது சிறிதளவே உண்டாகும் மனமாற்றம். அறிவாலும், பண்பாலும் வளர்ந்து பொறுமை அடக்கம் என்பவற்றைக் கொண்டவரும் கூடச் சினத்திற்கு ஆட்படுவர். ஆயினும் அதனை முயன்று அடக்கிக்கொள்வர். மறந்தும் போவர்.

**"பொறுத்தல் இறப்பினை என்றும், அதனை**
**மறத்தல் அதனினும் நன்று"**

என்றும் வள்ளுவர் கூறினார்.

ஒருவர் சினம் கொண்டால் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதனை மீள நினையாது மறந்து போதலும் வேண்டும் என்றார்.

குணங்களால் சிறந்தவர்களுக்கும் சினம் உண்டாதல் உண்டு. அதனை வளர விடாமல் நொடிப் பொழுதில் அவர்களே தடுத்துக் கொள்வர் என்றும் அவர் கூறினார்.

சினத்தை வளர விட்டால் இனத்தையும் அழிக்கும் என்றும், சினத்தைக் கொண்டவன் தன்னைத் தானே தீ மூட்டி எரித்துக் கொள்பவன் என்றும் சொன்னார்.

தீராச் சினம் போராக முடிவதும் உண்டு. குழந்தைகளின் விளையாட்டில் உண்டாகிய சண்டை பெரியவர்கள் சண்டையாகி விடுவதும் ஒருவர் சண்டை ஊர்ச்சண்டை ஆகிவிடுவதும் நாம் காண்பதே.

சினத்தை வளர விட்டால் சீற்றம் எனவும் கதம் எனவும் வெகுளி எனவும் வளர்ந்து அவ்வளர்ச்சிக்கு ஏற்றபடி தீமையும் மிகும்.

சீறுதல் என்பது சிந்திக்காமலே முட்டி மோதல். கதம் என்பது உள்வேக்காடாக இருந்து பழி வாங்கப் பார்த்தல். வெகுளி என்பது தீப்பற்றி எரிதல் போல எல்லாவற்றையும் அழித்தல்.

அக் கதம் வெகுளிகளுக்கு மேலும் வளர்வது உருத்திரம் ஆகும். அது மனவெறுப்பு வாய்ச்சண்டை கைச்சண்டை அளவில் நில்லாமல் கொலையளவில் செல்லும். இவற்றை எல்லாம் நன்கு உணர்ந்த ஔவையார் சினம் உண்டாதல் கூடாது. அப்படி உண்டாகி விட்டாலும் மேலும், மேலும் வளர விடாமல் தீயாறுவது போல் - வெப்பம் ஆறுவது போல் - அச்சினத்தையும் ஆற விட்டுவிட வேண்டும் என்றார். அதனையே,

**"ஆறுவது சினம்"**

என்றார்.

சினம் ஏறுதல் தன் உணர்வை அடக்கிக் கொள்ள முடியாமையால் ஏற்படுவது. சினத்தால் கெட்டுப் போனவர்கள் - கெட்டுப்போன குடும்பங்கள் - அழிந்து போன நாடுகள் உண்டு. அவ்வழிவுகள் ஏற்படாமல் இருக்க, சினம் ஏறாமல் ஆறி அணைந்து போகவிட வேண்டும் என்பது கருத்து.

பால் அடுப்பில் பொங்கத் தொடங்குகிறது. சில துளி நீரை விடுகின்றனர். பொங்கித்தட்டுதல் நின்று கீழே இறங்கி விடுகிறது. தீயை உடனே குறைத்தாலும் பொங்கி வெளியேறாது.

தீப்பற்றி எரிந்தால் தீயணைக்க நீரைப்பாய்ச்சி அடிக்க ஊர்தி ஒலியோடு வரக்காண்கிறோம். சிறுதீ - மரங்கள் உராய்வதால் உண்டாகும் தீ - கோடிக் கணக்கான பயன் உடைய காட்டை எரித்துக் கரிக்காடு ஆக்கிவிடுகிறது. அவ்வெரிக்கு உட்பட்ட உயிரிகள் ஆயிரம் ஆயிரமாய்ச் செத்து ஒழிகின்றன. ஆதலால் சிறிய தீ என்றாலும் பெரிய தீ என்றாலும் தீ, தீயே தான். தீய்த்து அழிப்பதே தான். சிறு தீயின் கேடும் பெரிதாம். சினத்தால் ஏற்படும் தீமையும் பெருங்கேடாம். ஆதலால், அச்சினத்தை அறவே முயன்று இல்லாமல் ஆக்குவது நன்மை என்பதை அறிந்து கொள்ள.

**"ஆறுவது சினம்"** என்றார்.

சினம் ஒருவருக்கு உண்டாகி விட்டால் பெற்றோர் என்றோ பிள்ளை என்றோ மனைவி என்றோ பாராது. சின உணர்வு உண்டாகி விட்டால், அறிவு வேலை செய்யாது. சினம் ஏறும் போது சிந்திக்கும் அறிவு குறைகிறது. இல்லாமலும் ஒழிகிறது. தாம் செய்வது சின்னத் தனமான செயல் என்பதை - ஒரு நொடி எண்ணினால் சினம் அடங்கிப் போகும்.

**'சினம் அடங்காதவர் மனம் அடங்காதவர்'** என்பது தாயுமானவர் நல்ல தேர்ச்சி உரை. அதனால்,

**"சினம்அடங்கக் கற்றாலும், சித்தியெலாம் பெற்றாலும் மனம்அடங்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"** என்றார்.

சினம் அடங்குதல் மனம் அடங்குதலின் முதற்படி என்கிறார் அல்லவா!

முதற்படியே ஏறமுடியாதவர் படிப்படியாய் ஏறி மலை உச்சியை அடைய முடியுமா?

ஆறுமுகம் என்பதை ஒன்று இரண்டு என்று எண்ணாமல், அமைந்த முகம். அடங்கிய முகம் என்று பண்பாட்டு வகையில் எண்ணிப்பாருங்கள், தெளிவு பிறக்கும். சால்புகள் வாழ்வாகாமல் சடங்காகி விட்டதே, ஆறுதல் என்னாமல் ஆறாக எண்ணியது.

முருகன் சினம் தணிந்த மலை தணிகை மலை என்னும் புனைவை விட்டு, இரண்டு பக்க உயரமான மலைகளுக்கு இடையே தணிவாக இருக்கும் மலையில்கோயில் கொண்டதே 'தணிகை' என உண்மையாக எண்ணுங்கள். பொய்ப்புனைவு கதிர்வரக் கண்ட காரிருள் போல அகன்று ஒளி விளங்கும்!

கருவி எடுப்பவன் கோழை! வீரன் கருவியைத் தொடான்! புலன் ஐந்தும் வென்றான் வீரமே வீரமாம் என்பவற்றை எண்ணுக!

## 3. இயல்வது கரவேல்

"உன்னால் இயன்ற பொருளை மறையாது கொடு" எனப் பொருளைச் சுருக்கி விடல் நூற்பா வன்ன ஆத்திசூடிக்குப் பெருமை சேராது.

கைக்கண்ணாடியில் கருமலை அடங்கி விடுவது போலவும், பனித்துளியுள் பனிமலைக் காட்சி போலவும் விரிவுடைய பொருள்கள் பொதிந்தது ஔவையார் அருளிய ஆத்திசூடி. **முழு முழு நாலடியையும், ஈரடியையும் இருசீர்களுள் அடக்கிக் கூறும் அருமையது அது!**

நீ படிக்கப் போகிறாயா? படிக்கத் தெரிந்து கொண்டாயா? இயல்வது கரவேல் என்பதைப் படித்துப் புரிந்து கொண்டாயா?

ஆம்! படித்தேன்; புரிந்து கொண்ட பயன் என்ன? "புரியவில்லை;" "சொல்கிறேன் கேள்" "புரிந்து கொண்டபயன் அதுதான்" உன்னைப் பெற்றவள் - வளர்த்தவள்; வளர்ப்பவள்; உன்தாய் தானே! உன்னைத் தந்தவரும் தூக்கிச் சுமந்தவரும், பள்ளியில் சேர்த்தவரும் உன்தந்தையார் தாமே!

இருவருள் தாய் இல்லை என்றாலும், தந்தை இல்லை என்றாலும் இருவருள் ஒருவர் இருந்தாலும், இருவருமோ ஒருவரோ உன்னைப் போல் படிக்கத் தெரிந்தவராக இருந்தாலும், தெரியாதவராக இருந்தாலும் உன்னைப் படிக்க வைக்கிறார்கள் அல்லவா! அவர்களுக்கு நீ கற்ற எழுத்தை எழுதப் படிக்கச் சொல்லித்தர உனக்கு இயலுமா இயலாதா? இயலும் என்றால் உன்னைப் படிக்க வைத்தவர்கள் படியாதவர்களாக இருந்தால் உன்னால் படிக்க வைக்க முடியுமானால், அவர்கள் உனக்குக் கொடுத்த கொடையில் ஓராயிரத்தில் ஒரு பங்காவது திருப்பிச் செய்தவன் ஆவாய் அல்லவா! கற்கும் போதே, உன்னைக் கற்க வைப்பவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர் ஆகி விடுவாய் அல்லவா! நீ கற்பித்தலால் உன்னை அறியாமலே கல்வியும் நன்றி உணர்வும்

வழிகாட்டலும் உனக்குப் பெருகி, அண்டை அயலார்க்கும் அது செய்யத் தூண்டும் அல்லவா!

அப்படியே அதனை விரித்துப்பார், உன் குடும்பத்தில் மூத்தோர் இளையோர் வேலை செய்வோர் ஆகியோர்க்கு எழுத்தறிவை உண்டாக்கி விட்டால் உன் வீட்டில் படியாதவர் எவராவது இல்லாமல் செய்ய இயலுமே! இதனைச் செய்யாமல் விட்ட குறைதானே இத்தனை பள்ளிகள்! இத்தனை ஆசிரியர்! இத்தனை செலவுகள் செய்தும் படியாதவர் பாதிப்பேர்க்கு மேலும் உள்ளனர். படித்தவர் ஒவ்வொருவரும் அவரவர் வீட்டில் படியாதவர் இல்லை என்று ஆக்கியிருந்தால் நாடே நூற்றுக்கு நூறுபேரும் கற்றவராக இருந்திருப்பார் அல்லரா?

“வேலை வேண்டுமா, உன்படிப்புக்குத் தக்க வேலையுண்டு! படியாத ஒரு பத்துப்பேரைப் படிக்க வைத்துவிட்டு அவர்களைக் கொண்டுவந்து எங்கள் முன்நிறுத்து. அவர்களை எங்களிடம் படிக்கவும் எழுதிக்காட்டவும் செய். அப்பொழுதே உனக்கு வேலைக்கு ஆணை தருகிறோம்” என்றிருந்தால் படியாதவர் இருப்பாரா? கல்லாதவர் இந்நாட்டில் இல்லை என்னும் பெருமை நாட்டுக்கு உண்டாகியிருக்குமல்லவா!

இன்னும் பார்! நீ ஒரு தொழிலைக் கற்கிறாய். அத்தொழிலை அறியாதவர் ஐவருக்குக் கற்றுத்தந்தால் ஐவர்தம் குடும்பத்தைத் தொழில் செய்ய வைத்து உழைப்பால் அவர்கள் வாழச் செய்த கொடையாளன் ஆவாய் அல்லவா; அக்குடும்பம் பிறரிடம் கையேந்தாக் குடும்பமாய் உன்னைக் கையெடுத்துக் கும்பிடும் குடும்பமாய் விளங்குமல்லவா!

உனக்கு உடல் வலு உள்ளது; உழைக்க முடியும்; உழைக்கும் அளவு உழைக்கிறாயா? உனக்கு உழைப்புத் தந்தவர்களுக்கு உன்னால் முடிந்த அளவும் உன் உழைப்பைக் குறையாமல் கொடுத்தாயா? இல்லை, இவ்வளவு போதும் என்றோ, இந்தக் கூலிக்கு இவ்வளவு போதாதா என்றோ கணக்குப் பார்த்துச் சுருக்குகிறாயா? உழைத்து உன் மனநிறைவும் பெற்று, உனக்கு உழைப்புத் தந்தவரையும்

உழைப்பையும் உயர்த்தி நீயும் உயர்வதற்குரிய வகையில் உரிமையும் தொகையும் பெற்று உயரலாம் அல்லவா! உனக்கு இயலும் உழைப்பையும் ஏன் குறைக்கிறாய்? உழைப்பைக் குறைப்பது உடல்வலிமையை - திறத்தைக் குறைப்பது வீட்டையும் தொழிலையும் தொழில் முனைவோரையும் நாட்டையும் குறைப்பது என்பதை உணர்ந்தால் அது செய்யாய்!

**நீ என்ன செய்யப் போகிறாய்?**

**தொண்டு செய்யப் போகிறேன்!**

**நீ உண்மையில் தொண்டு செய்யும் உள்ளம் – உறுதி – உழைப்பு**
**தன்னலமில்லாத தன்மை – பழி புகழைக் கருதாமை**
**உடையவனா? அவற்றை எண்ணிப்பார்த்தாயா?**

**பணம் தேடுதற்குத் தொண்டனாகப் போகிறாயா?**

**பதவி பட்டம் பெறத் தொண்டனாகப் பேகிறாயா?**

**பரிசு புகழ் பெறத் தொண்டனாகப் போகிறாயா?**
**இவற்றுள் ஏதாவது ஒன்று உன்னிடம் இருந்தால்,**
**தொண்டு வட்டத்துள் புகாமல் தொலைவில் நீ**
**போய்விட்டால் உனக்கும் நல்லது; நீ செய்யப்போகும்**
**தொண்டுக்கும் நல்லது!**
**மீனைப்பிடிக்கத் தூண்டில் போடுபவனாய், வலை வீசுபவனாய்,**
**பறவையைப் பிடிக்கக் கண்ணி வைப்பவனாய், உன்**
**தொண்டால் வேட்டையாட – விளையாட – எண்ணாதே**

மேல் தொண்டனாய், ஈடுபடு! இல்லையா, ஏதாவது வயிற்றுப் பிழைப்புத் தொழிலில் ஈடுபடு! போலித் தொண்டால் தொண்டர்க்குச் சிறுமை ஆக்காதே! தொண்டின் கோலத்தால் - தவத்தின் உருவத்தால் - மடங்களின் சமயங்களின் பெயரால், சால்பு கெட்டுப் பழிவழியில் செய்வார் வள்ளுவர் காலத்திலும் தலையெடுத்தமையால் தான், தொண்டின் கோலத்தால் வீட்டையும், நாட்டையும் நம்பினாரையும் கெடுத்ததால்தான் "கூடா ஒழுக்கம்" என்பதைத் தவத்தின் பக்கத்திலேயே வைத்தார்.

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா" என்றார்.**

**அறிவிலாரை மயக்கிப்பணம் பறித்தல், மானக் கேடு**

**செய்தல் கண்டே "அறிவிலான் நெஞ்சுவந்து**
**ஈதல் தவக் கோலம் போலியாகக் கொண்டானைக்**
**கண்டே" என்றார்**

*தொண்டனுக்கு பெரியர் சிறியர் இல்லை!*

*சாதி சமயம் இல்லை!*

*இனம் மொழி நிறம் பதவி என்னும் வேறுபாடு இல்லை. மனிதனை மனிதனாக மதியாதவன் தொண்டன் ஆகான்! குப்பை கூட்டுவான் என்றும் கோலோச்சுவான் என்றும் அவன் பார்வையில் இல்லை! தட்டில் - உண்டியலில் போடும் பணத்தைப்பார்த்து மதிப்புச் செய்யான். தொண்டன் இறையடியவன் ஆகான்! அஞ்சுவதும் இல்லை! அஞ்ச வருவதும் இல்லை என்று துணிந்தவன் தொண்டன்! இறைமைத் தொண்டன்! தமிழச் சித்தர்களைப் பார்த்தால் ஊரும் இல்லை! 'பேரும்' இல்லை! ஊரார் வைத்த பெயரினர் அவர்; அவர் பாடலில் உள்ள தொடரால் பெயர்! அவர் இயல் செயலால் மக்களிட்ட பெயர் அன்றி, அவர் பெயரில்லை!*

*தொண்டால் கோடி கோடி கொடைபெற்றுக் கொள்ளை கொள்ளையாய்த் தமக்கும் தம்குடும்பத்துக்கும் குவித்து வைப்பவர் தொண்டு - சேவை - மடம் - கோயில் - அறங்காவலர் என்னும் பெயரில் உலாவி இயன்றமட்டும் சுருட்டும், 'இயல்வது கரக்கும்' கொள்ளையரேயன்றி 'இயல்வது கரவேல்' என்னும் தொண்டர் ஆகார்!*

*உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவாரே அடியார் - மாந்தர் - ஆறறிவர் ஆகார் என்றால், உள்ளொன்று வைத்துப் புறமொன்று செய்வார் தொண்டர் ஆவாரா!*

*மெய்த் தொண்டன் இயல்வது கரவாமல் உயிரீகமும் செய்வானே அன்றி தொண்டாற்ற வேண்டும் என்றே மீண்டும் பிறக்க வேண்டும் என்று எண்ணுவானே யன்றி வீடும் வேண்டா விறலின் விளங்குவான்! வேண்டாமையே விழுமிய செல்வமாகக் கொண்டு பேரா இயற்கை பெறுவான்! அவன் செம்பொருள் கண்டநிலை அது.*

❖❖❖

## 4. ஈவது விலக்கேல்

ஒருவர் ஒருவருக்கு ஏதாவது கொடுப்பதை நீ தடுக்காதே என்பது இதன் பொருளாம்.

பிறர்க்கு உன்னால் கொடுக்க முடியவில்லை என்றாலும் - கொடுக்க நீ விரும்பவில்லை என்றாலும், பிறர், பிறர் ஒருவருக்குக் கொடுப்பதைத் தடுக்காமலாவது இரு.

நீ கொடுப்பதும் கொடாததும், உன் விருப்பம் உன்வளம் உன்நிலை ஆயவை சார்ந்தவை. ஆனால், பிறர் பிறர்க்குக் கொடுப்பதைத் தடுப்பது இரட்டைக் கேடாம்.

நீ கொடாமை ஒன்று; பிறர் கொடுப்பதையும் கொடுக்க விடாமை இன்னொன்று.

ஒருவர் கொடுப்பதால் அதனைக் கொண்டு அவனால் தீர்க்க முடியாத பசியை - வறுமையை - கடனைத் தீர்த்து உயிர் வாழவும் மேடேறவும் முடியும். அதனை நீ செய்யாமல் போனாலும் போ! ஆனால் இன்னொருவன் கொடுப்பதைத் தடுத்து அதனைப் பெற இருந்தவன் குடும்பத்தைக் கெடுக்க வேண்டும் என்பது, தீமையில் தீமையாவது இல்லையா?

உன் செயல் மாந்த நேயச் செயலா?

ஒருவன் ஈதலால் இன்பம் இருவருக்கும் ஆகும்! இருவர் எவர்? கொடுப்பவர் ஒருவர்; கொடுப்பதைப் பெறுபவர் இன்னொருவர். இவர்கள் இருவருக்கும் இன்பமாதலை,

> **"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
> **வைத்திழக்கும் வன்க ணவர்"**

> **"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
> **ஊதிய மில்லை உயிர்க்கு"**

என்னும் குறள்கள் சான்றாம்.

ஈவது விலக்கல் பற்றியும் அதன் விளைவு பற்றியும் 'அழுக்காறாமை' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் மிக மனம் நொந்து கடிந்து கூறுவார்.

அது,

> **"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்**
> **உண்பதூஉம் இன்றிக் கெடும்"**

என்பது.

"ஒருவர் ஒருவர்க்குக் கொடுப்பதை ஒருவர் தடுத்தால் தடுத்தவர் தாம் மட்டும் அல்லாமல் தமக்கு என்றும் துணையாகவும் உதவியாகவும் இருக்கும் சுற்றத்தாருக்கும் உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாமல் கெட்டும் கெடுத்தும் பாழாகிப் போவார் என்கிறார் அவர். பொறையுடைமை கூறிய அவர் - தாமே பொறுத்துக் கொள்ள முடியாமல் - கூறியது அல்லவா!

இக்குறளின் பொருள் விளக்கமாம் வகையில் ஒரு தொன்ம - புராணக் - கதையை எடுத்துரைத்தார் கம்பர்.

மாவலி என்னும் வள்ளல் ஒருவன் வாழ்ந்தான். அவன் பெருவலிமையாளன் மட்டுமல்லன்; பெருங்கொடை யாளனாகவும் இருந்தான். எவர் வந்து எதைக் கேட்டாலும் அதனைக் கொடுத்து மகிழ்பவன்! அக் கொடையினால் தனக்கே வறுமையும் கேடும் வருமாயினும் மறுக்காமல் கொடுப்பவன். அதனால், அவனிடம் வஞ்சமாக அவன் நிலத்தையெல்லாம் கவர்தற்காகத் திருமால் வாமனன் என்னும் பெயரோடு குள்ளமான உருவத்தில் வந்து, என் கால் அடி அளவில் மூன்றடி அளவு நிலம் தா; நான் வேள்வி செய்ய வேண்டும் அவ்விடத்தில் என்றான்.

வள்ளல் மாவலி "தந்தேன்" என்றான். "தந்ததற்கு அடையாளமாக நீர்வார்த்துத் தா" என்றான் வாமனன்.

ஒரு கெண்டியில் நீரை முகந்து மாவலி, வாமனன் கையில் 'மூன்றடி மண் தந்தேன்' என நீர்விடத் தொடங்கினான்.

மாவலியின் அமைச்சன் சுக்கிரன் என்பான். அவன், திருமாலே வாமன வடிவில் வஞ்சமாக நிலத்தைப் பறிக்க வந்துள்ளான் என்று, நீர்விடுவதைத் தடுத்தான். அப்பொழுது மாவலி கொடுத்தது கொடுத்தது தான்; என் கொடையைத் தடுக்காதே! ஒருவர் ஒருவர்க்குக் கொடுக்க முயலும் போது தடுத்தால் தடுத்தவரும் அவர் சுற்றமும் உடுப்பதற்கும் உண்பதற்கும் வழியில்லாமல் கெட்டுப்போவர் என்று தடுத்தவனைத் தடுத்துக் கொடுத்தேன் என நீர் வார்த்தான்.

வஞ்சமாக வந்த வாமனன், நெடுமாலாய் வளர்ந்து ஓரடியால் மண்ணையும் மற்றோர் அடியால் விண்ணையும் அளந்து மூன்றாம் அடிக்கு இடமில்லாமையால் மாவலி தலைமேல் வைத்து மண்ணுள் அழுத்திக் கொன்றான் என்பது, இக்கதைக்குக் கம்பன் திருக்குறளை அப்படியே சான்று வைத்துப் பாடினான்.

**"எடுத்தொருவர்க் கொருவர் ஈவதனின் முன்னே**
**தடுப்பது நினக்கிது அழகோ? தகவில் வெள்ளி**
**கொடுப்பது அழுக்கறுக்கும் கொடியோய் உன்சுற்றம்**
**உடுப்பதும் உண்பதும் இன்றிக் கெடுகின்றாய்"**

என்பது அது.

"ஈவது விலக்கேல்" என்பது இருசீரடியாம் குறளடி!
அதன் விரிவு இன்னும் விரியும்!
பனித்துளியில் பனைமரம் அடங்குவது இல்லையா?

**"தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட**
**பனையளவு காட்டும் படித்தால் - மனையளகு**
**வள்ளைக் குறங்கும் வளநாட, வள்ளுவன்**
**வெள்ளைக் குறட்பா விரி"**

என்பது திருக்குறளைப் பற்றிய திருவள்ளுவமாலைப் பாட்டு, திருக்குறள் 'குறள் வெண்பா! ஏழு சீருடையது!'

ஔவையார் கூறிய ஆத்திசூடியோ இருசீர்களேயுடைய
**குறளடிப்பா!** சுருக்கத்தில் சுருக்கமாம் சொல்!
பெருக்கத்தில் பெருக்கமாம் பொருள்!

❖❖❖

## 5. எண்ணெழுத்து இகழேல்

எண் என்பது கணக்கு, அறிவியல், இலக்கணம்! எழுத்து என்பது இலக்கியம், உரைநடை, இசை, நாடகம். எண் எழுத்து என்பது எண்ணே எழுத்து, எழுத்தே எண் என்னும் இயைவு உள்ளமை அறிய வேண்டும்.

௧ - ஒன்று
௨ - இரண்டு
௫ - ஐந்து
௭ - ஏழு
௮ - எட்டு
௰ - பத்து
௱ - நூறு
௲ - ஆயிரம்

மூன்று, நான்கு, ஆறு, ஒன்பது - என்பவற்றில் சில மாற்றம் உடையவை. (௩, ௪, ௬, ௯)

1, 2, 3 என இந்நாள் உலக வழக்கிலுள்ள எண்கள் தமிழன் வணிக வகையில் உலகுக்குத் தந்த வளம்.

எண்ணும் எழுத்தும் ஒன்றாய் இருந்தும் எண்ணைப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரைக்கும் போற்றிக் காத்தும் அறவே இந்நாள் விட்டொழித்த சிறுமையரும் தமிழரே. கணக்கதிகாரம் என்பது இருந்தும், அதனை இன்றும் அறிந்து கொள்ளாத தமிழனா பழைய அளவையியல் ஏரம்பம் முதலியவற்றை எண்ணப் போகிறான்!

'எண்ணெழுத்து', எண் வழி அறிவன எழுத்து வழி அறிவன என்னும் எல்லாவற்றையும் ஒருங்கே குறிக்கும் கலைச் சொல். இகழேல் என்பது கல்லாமல் கற்பியாமல் விடாதே என்பதாம்.

ஐ, அம் பல் என்னும் ஈறுகள் உடைய எண் உண்டா? அவை எத்தனை? பெயரே அறியார் எண்ணிக்கையா அறிவார்?

அணு எட்டுக் கொண்டது இம்மி, இம்மி எட்டுக் கொண்டது துகள். துகள் எட்டுக் கொண்டது எள்ளு. எள்ளு எட்டுக் கொண்டது நெல்லு; நெல்லு எட்டுக் கொண்டது ஒரு கைவிரல். கைவிரல் இருபது கொண்டது ஒரு கோல். இந்தக் கணக்கியல், ஒன்றனை 32 ஆயிரத்தின் மேலும் பிரித்த நுண்மை, அடியார்க்கு நல்லார் உரையால் கண்ட தன்றிக் கண்ட துண்டா?

ஆயிரம் நரம்பிற்று ஆதி யாழ் அறிவோமா?

எண்ணையும் எழுத்தையும் எல்லாரும் அறிய, அறிந்தவர் விட்டனரா? ஆள்பவர் வழி செய்தனரா?

வறுமையிலே உழன்று வாய்க்கும் வயிற்றுக்கும் வகையற்ற ஒரு சில புலமையாளர், கட்டிக் காத்ததால்தான், அதனை அவன் பரம்பரை காத்துவந்ததாலும் படியெடுத்ததாலும் தான், இந்நாளில் தொல்காப்பியம் எனவும் சங்க இலக்கியம் எனவும், திருக்குறள் எனவும் கீழ்க்கணக்கு காப்பியம் தேவாரம் திருவாசகம் திவ்வியப் பிரபந்தம் எனவும் நமக்கு வாய்த்த ஒரு சிறுபகுதி நூல்களாலேயே செம்மொழித் தகுதியைப் பெற்றோம்.

எழுத்தில் செய்யப்பட்ட சிறுமையை இந்நாள் தமிழர் அறியார்.

இனத்தை ஒன்றுபடாமல் என்றும் அதற்குள்ளேயே முட்டிக் கொள்ளவும் மோதிக் கொள்ளவும் அடித்தும் பிடித்தும் அழிந்து கொள்ளவும், மானக் கேட்டை உண்டாக்கவும் உருவாக்கப்பட்ட அழிமானச் சாதியை எழுத்துக்கும் ஆக்கிய கொடுமையை எத்தனை பேர் தமிழர் அறிவார்.

உயிரெழுத்தும், கங சஞ டண ஆகிய 18 எழுத்தும் பிராமண எழுத்தாம்

தந பம யர இந்த ஆறு எழுத்தும் சத்திரிய எழுத்தாம். ல வ ழ ள - வைசிய எழுத்தாம், ற ன - சூத்திர எழுத்தாம்.

இப்படி வகுத்து விட்ட சண்டாளர், அதற்குப் பாட்டியல் என்று பட்டம் சூட்டினர். பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல் இலக்கண விளக்கப் பாட்டியல் என்னும் பிறவுமாம் பாட்டியல்கள் உண்டாயின. எழுத்துக்களில், அமுத எழுத்து நச்செழுத்து மங்கல எழுத்து அல்மங்கல எழுத்து . அட சண்டாளர்களே, நீங்களெல்லாம் கல்வி கற்றவர்களா? கொலைக் கருவியை எழுத்தாணி எனக் கொண்ட கொலையர்களா?

வெண்பா - பிராமணர் பா!
ஆசிரியப்பா - அரசர் பா
கலிப்பா - வணிகர் பா
வஞ்சிப்பா - சூத்திரர் பா

வெண்பாவும், ஆசிரியப்பாவும் ஓங்கி விளங்கக் கலிப்பாவும் வஞ்சிப்பாவும் பாடுவாரற்று ஒழிக்கப்பட்டவை இல்லையா? ற, ன வடமொழியில் இல்லை ஆதலால் சூத்திர எழுத்து.

எழுத்துக்குச் சாதி உண்டாக்கிய சிறுதனம், உலகில் எம்மொழிக்கேனும் உண்டா? அதனைப் பாட்டியலாக்கி நஞ்சூட்டிய இழிமை எம்மொழிக்காவது உண்டா? வடமொழியில் இல்லாத தமிழ் எழுத்துகள் ஐந்து அவை 'ற ன ழ எ ஒ! இல்லாக்குறை மொழி என்று சொல்ல வாய் வராத தமிழ்ப் பிறவி ஒன்று - தொல் காப்பியக் கடல் எனப் பாராட்டப்பட்டு இலக்கணக் கொத்து எழுதிய பிறவி -

"ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்று அறையவே
நாணுவர் அறிவுடையோரே"

என்று அறைந்தால், கன்னத்தில் அறையத் தமிழ்ப் புலமையர் இல்லாத் துணிவு தானே!

நிறைமலையாம் மறைமலையாரும், மொழிஞாயிறாம் பாவாணரும் தோன்றாக் கால் இன்றும் அந்நிலை தானே இருந்திருக்கும்.

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை" என்பது யாப்பிலக்கண மேற்கோள். எழுத்தைக் கூட்டச், சொல்லும் பொருளும் தெளிவாக முன்னிற்கும். இத்தகு எழுத்தையும் சிந்திக்க சிந்திக்க. ஒன்றுபடுக, ஒன்றுபடுக என்று தொடங்கிய எண்ணையும் இகழ்ந்த குற்றம், படிப்பேறியதுடன் தடிப்பேறிய தெய்வப்பிறவி எனப்பட்டவர்களையும், அப்பிறவிகளின் அடிமையாகக் கிடந்த கிடக்கின்ற தமிழ்கற்ற மடவர்களையும் ஆட்சிக் கட்டிலில் இருந்தும் எடுபிடியாகிப் போகிய வீரக் கோழைகளையும் அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு வாய்மூடிக் கிடப்பதே வாழ்வுப் பேறு எனக் கொண்ட ஐந்தறிவுத் தமிழ்ப்பிறவிகளையும் தட்டாமல் சேரும்.

இல்லையானால்

**"தன்மகன் ஆசான் மகனே மன்மகன்**
**பொருள்நனி கொடுப்போன் உரைகோ ளாளன்"**

என்பார் மட்டுமே கற்கத் தக்கார் என்றும்,

**"களிமடி மானி காமி கள்வன்**
**பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்**
**துயில்வோன் மந்தன் தொன்னூற்கு அஞ்சித்**
**தடுமா றுளத்தன் தறுகணன் பாவி**
**படிறன் இன்னோர்க்கு பகரார் நூலே"**

என்றும் தடுக்கும் நூல் எவ்வளவு உயர்ந்த நூலாயினும் முற்றிலும் நன்னூல் ஆகுமா?

**"ஒன்றானும் தீச்சொற் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்"**

என்பது வாய்மையுரை யல்லவோ!

பின்னாளில் எழுந்த எழுச்சிப் பாவலர் பாரதியார்,

**“கல்வியிலாததோர் ஊரினைத் தீயினுக்கு**

**இரையாக மடுத்தலே கலைமகள் வழிபாடு”** என்று பாடப், புரட்சிப் பாவலர் பாரதிதாசனார்,

**“கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்கு மரம்**

**அங்கே உண்டாம்”**

என்று பாடினார்.

அரசியல் கொள்ளையரும் மதுக்கடைக் கொள்ளையரும் ஆங்கிலவழிக் கொள்ளையரும் தமிழ் எண்ணும் எழுத்தும் பால்வாய்ப்பள்ளி முதல் பல்கலைக் கழகக்கல்வி வரை ஒழிக்க வழிகாட்டிய பெருமை, “எங்கும் தமிழ் எல்லாம் தமிழ்” என்று அரசுக் கட்டில் ஏறிய ஆட்சிகளுக்குத் தாமே உண்டு! ஆங்கிலேயரும் செய்யா மொழிக் கொடுமையைச் செய்த கொடுமை கோலோச்சும் கொடியவர்களுக்கு உண்டு என்பதை எண்ணும் போதுதான் ஒளவையார் கூறிய “எண்ணெழுத் திகழேல்” என்னும் வான்சுடர் ஒளியை உலகம் அறியும்.

❖❖❖

## 6. ஏற்பது இகழ்ச்சி

ஆத்திசூடியைப் பள்ளிக் கூடங்களில் தலை காட்டவிடாமல் அரசு செய்து விட்டது. "இப்படி யெல்லாம் படித்தால் மக்களுக்கு மானம் தப்பித் தவறி ஏற்பட்டு இலவசங்களை ஏற்க மறுத்து விட்டால் நம் எதிர்கால வாக்குகள் என்னாவது என்று எண்ணித்தான் தமிழ்ப் பள்ளிகளைத் திட்டமிட்டு ஒழிக்கின்றதுவோ என்னவோ? என்றும், மக்களும் இதைப் படித்தால் நம் பிள்ளைகள் நம்மிடம் ஏற்பது இகழ்ச்சி'' என்று சொன்னாலும் சொல்வார்களே என்றும், 'மம்மி டாடி' என உள்ளம் கிளுகிளுக்கச் குழந்தைகள் நம்மை அழைக்க மாட்டார்களே என்றும் ஆத்திசூடியை வெறுத்தார்கள் போலும் எனக் கற்பனை செய்யவைத்தது இத்தொடர்.

ஆத்திசூடியைத் தாய்மார் மட்டும் தாங்கியிருந்தால் குடும்பச் சீர்க்கேடுகள் பல தலை காட்டியிரா எனலாம். ஆனால், தமிழர் எதைத்தான் வாழ்வியலாக ஏற்றுக் கொண்டார்கள்?

> **"ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்**
> **ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று"**

என்னும் புறநானூற்றுப் பாடல் ஒன்று உண்டு.

இரத்தல் வேண்டா என்னும் வள்ளுவர்,

> **"இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
> **கரப்பார் இரவன்மின் என்று"**

என்றார். இரவச்சம் என்றே ஓரதிகாரம் பாடினார்.

ஒருவரிடம் இரப்பது இழிவு என்பது மட்டுமன்று, வலிய வந்து ஒருவர் இதோ கொள் என்று கொடுத்தாலும் அதனை ஏற்றுக் கொள்வதும் இகழ்ச்சி யாகும்.

தம் உழைப்பால் தாமும் உண்டு பிறரும் உண்ண வேண்டும். தம் சொந்த வீட்டில் குடியிருக்கவும் வேண்டும். என்பது வள்ளுவம். அது,

**"தம் இல் இருந்து தமது பாத்துண்ணல்"**

(பகுத் துண்ணல்) என்பது.

ஏற்றுப் பழக்கப் பட்டுப் போனால் என்ன ஆகும்? 'ஏற்பது இகழ்ச்சி' எனத் தோன்றாது. பின்னர்த் தானே ஏற்கத் தூண்டும்; இரந்து திரிய வைக்கும். பிச்சை எடுப்பது பழக்கமாகிப் போகும். அப்படிப் பழக்கமாகி விட்டால் உழைக்க வேண்டிய தேவையில்லை. உழைக்காமல் பிச்சை எடுத்தே வாழலாம் என்னும் எண்ணம் உண்டாகி விடும்.

உழைப்பவர் கை உழையாக் கை ஆகிவிடும்.

உழைப்பார் பிழைக்கத் தெரியாதவர் என்றும் ஆகும்.

ஒரு நாடே இன்னொரு நாட்டை எதிர்நோக்கி வாழக் கூடாது. ஒரு நாட்டின் உதவி இல்லாமல் வாழ முடியாது என்பது ஒரு நாட்டுக்கு ஏற்பட்டால் அது, நாடு எனப்படவே படாது என்பதை,

**"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரு நாடு"**

என்பார். அப்படியானால் ஒரு வீடு இன்னொரு வீட்டின் உதவியால் வாழலாமா? வாழ்ந்தால் வீடாகுமா?

ஒரு மனிதன் இரந்து தான் வாழ வேண்டும் என்னும் நிலைமை ஒரு நாட்டில் ஏற்பட்டால் அந்நாட்டு அரசு அழிந்தொழியட்டும் என்னும் வள்ளுவம் இரப்பதை ஏற்குமா?

பசித்தவனுக்குப் பசி போக்குவதே கடமை என ஏற்றுக் கொள்ளாதே, அவன் பசியைப் போக்கிக் கொள்ளத் தக்க தொழிலைக் கற்றுத்தா அவனுக்கு என்பதே வள்ளுவ ஆணை! உலக நல ஆணை!

**"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்"**

என்பது அது.

வறிய குழந்தைகள் கல்வி பெற வாய்ப்பில்லாமல் ஆடுமாடு மேய்த்தும் குடும்பத் தொழில்களுக்கு உதவியும் இருக்கும் நிலை நாட்டில் இருந்தது. அந்நிலையை மாற்ற நண்பகல் உணவுத்திட்டம் கல்வித் துறைவழியே அரசு கொண்டு வந்தது. ஊரவர் உதவவும் செய்தனர். அவ்வுதவி வாய்ப்பற்ற குழந்தைகளுக்கு மட்டுமே இருந்தது. பின்னர் மேல்படிப்புக்கும் கல்விச் சலுகை, விடுதி வாய்ப்பு என்பவை உண்டாயின.

பின்னர்ப் பங்கீட்டுக் கடைகள் நியாய விலைக் கடைகள் எனச் சில பொருட்கள் மலிவு விலையில் வழங்கப்பட்டன.

வெளிச்சந்தை விலையொடு ஒப்பிட மிகக் குறைவாக இருந்ததால் அரசியலாரும், கடையில் வணிகம் செய்தவரும் போலி அட்டைகள் உண்டாக்கியும் கொடுக்காததைக் கொடுத்ததாகக் காட்டிக் கடத்தல் தொழிலால் பொருள் குவித்தனர்.

வரவரத் தேர்தல் அறிக்கையில் ஏழைகளுக்குப் படியரிசி இரண்டு உருபா, ஒரு ரூபா என்று இருந்து, பணமே இல்லாமல் கொடுப்பது என்னும் இலவசங்கள் ஏற்பட்டன. கொடுப்பது பாதி, கடத்துவது மீதி என ஆயது.

தீபாவளி, பொங்கல் எனச் சீலை வேட்டி இலவசம் உண்டாயது. மிதிவண்டி, மடிக்கணினி, தொலைக்காட்சி முதலியவை இலவசங்களாயின. போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொரு தேர்தலிலும் இலவசங்கள் பெருகுகின்றன. நூறுநாள் வேலை என வேலை செய்யாப் பதிவு வேலையும் பாதிக்குப் பாதி கொள்ளையும் ஆயின.

உழவுக்கோ, மற்றை வேலைக்கோ வராமல் - ஆள் கிடையாமல் கிடைத்தாலும் கேட்கும் கூலி கொடுக்க

முடியாமல் - சம்பளம் கூடியது! பொருள்களின் விலை தாறுமாறாக ஏறியது. இவ்விலவசங்களுக்குத் திட்டமிடவும், பொருள் திரட்டவும் ஒரு வழியை ஆள்வோர் கண்டனர். அது குடியைக் கெடுக்கும் குடிவகைகளைக் கொடுப்பது என்பது. குடியை விற்பதால் ஒவ்வொரு நாளும் கோடி கோடியாகத் தேடி, இலவசங்களைக் கொடுத்து ஆட்சி பெற்றுக்கொள்ள - கொள்ளையாக் குவிக்க - வழிகண்டனர். குடி, கெட்டுக் குலைந்தது குடியால். இலவசம் நாட்டையே பிச்சைக்காரர் நாடு ஆக்கிற்று; உழையாச் சோம்பரை ஆக்கிற்று. வலிந்து உண்டாக்கப்பட்ட கேடுகள் இவை!

உழவனுக்கு மலிவு விலையில் உரம், பூச்சி மருந்து; இலவச மின்சாரம்; அவனுக்குக் கட்டுப்படியாம் விலை தரல் இவை உழவுத் தொழிலில் ஈடுபட்டுச் செய்ய வைத்து நாட்டு நலமாக்கும்.

பொதுமக்கள் எவராயினும் மருத்துவ உதவி இலவசமாகப் பெறவாய்ப்பு உண்டாக்க வேண்டும். எவரும் எக்கல்வியும் எக்கட்டணமும் இல்லாமல் பெற வாய்ப்பு வேண்டும்.

தொழில் படிப்புப் படித்தவர் கலைப்படிப்புப் படித்தவர் அனைவருக்கும் கட்டாயம் தொழில் தருதல் வேண்டும்.

எத்தொழில் எனினும் கீழ் மேல் சம்பள எல்லை திட்டப்படுத்திவிட வேண்டும். ஏனெனில், எல்லார்க்கும் உணவு உடை உறைவிடம் பயன் பொருள் எல்லாவற்றின் விலையும் ஒரே விலை தானே! அவற்றை வாங்க முடியாத குறைந்த சம்பளத்தில் வேலை செய்து வாழ முடியாதே!

கையூட்டு கடத்தல் முதலாயவை கடுமையாகக் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.

இவற்றைச் சரியாகச் செய்வார்கள் என்னும் நம்பிக்கை ஏற்பட்டு விட்டால், களவு கையூட்டு கடத்தல் குறைந்தே ஆகும். இவற்றை நிறைவேற்றத் தந்நலம் இல்லாத தலைமையும் கட்சி- சமய - உயர்வு - தாழ்வு - கருதாத நேர்மை தூய்மை துணிவு கொண்ட துணைகளும் உடைய அரசு வேண்டும்!

அவ்வரசு கற்பனை அரசு என எண்ண வேண்டியதில்லை! பொதுவுடைமை அரசே தோற்று விட்டது என்று எண்ண வேண்டியதில்லை!

ஒப்புரவு பொதுவுடைமை என்பவை, என்றும் தோலா உண்மைகள்! அவற்றை நடைப்படுத்தும் தக்க தலைமை இல்லாமையே தோல்வி மூலம் என்பதை எண்ணின் உண்மையாகக் கண்காண நிகழ்ந்தே ஆகும்!

அப்பொழுது 'ஏற்பது இகழ்ச்சி' என்பதற்கு இடமே இராது. ஏற்பது இகழ்ச்சி என்பதற்கு இன்னொரு பொருளும் உண்டு. ஒருவர் தர வேண்டும் கடனை அவர் தராவிடின் நான் தருவேன் என்று ஏற்றுக் கொள்வது, நம்பிக்கைக் கேடர், இயலா நிலைக்கு ஆட்பட்டவர், இறப்புக்கு ஆட்பட்டவர் வழியே தாங்காச் சுமையாகி நலிந்த குடும்பங்களும், தற்கொலையே செய்து கொண்டவர்களும் உண்டு என்பது நாடறி சான்றாம். ஆதலால் ஏற்றுக் கொள்ளும் பொறுப்பைப் பன்முறை எண்ணிப் பார்த்துச் செய்க! இல்லையேல் இகழ்ச்சி ஏற்பட வாய்ப்புண்டு என்பதாம்.

ஏற்பது இகழ்ச்சி என்னும் சால்புக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர் எய்துவது பெருமிதவாழ்வு! என் காலால் நான் நிற்பேன்! எனக்கு உதவ ஒருவரைத் தேடேன் என்னும் பெருமித வாழ்வு பெருகப் பெருக நாடும் வீடும் ஒருங்கே சிறக்கும்!

ஏறுபோல் பீடு நடையிடத் தனியாளுக்கும், வீட்டுக்கும், நாட்டுக்கும் மொத்தத்தில் நலவழியும் நல்வழியும் 'ஏற்பது இகழ்ச்சி' என்பதை எண்ணி உறுதியுற வாழ்வதேயாம்.

❖❖❖

## 7. ஒப்புரவு ஒழுகு

"ஒப்புரவு அறிதல்" என்பது திருக்குறளில் ஓர் அதிகாரப் பெயர். அப்பெயரே ஔவையார் வாக்கில் ஓர் அறப்பாடல் ஆகிவிட்டது.

ஒப்புரவு, ஈகை, புகழ் என்பவை திருக்குறள் இல்லற இயலின் இறுதி மூன்று அதிகாரப் பெயர்கள்! ஒன்றற்கு ஒன்று அரிய தொடர்பு உடையவை.

ஒப்புரவுக்கு அடிப்படை இயற்கையின் இயக்கம் அறிதல். மழை எல்லாருக்கும் பொதுவாகப் பெய்வது. தீ எவர்க்கும் பயன்படுவது; எதனையும் விடாமல் அழிப்பது. காற்று ஒருவருக்குச் சொந்தமானது இல்லை. எல்லார்க்கும் பொதுவானது.

மண்ணாகிய நிலமும் எல்லார்க்கும் பொதுவாக இருந்தது முது பழங்காலத்தில். பின்னர் மனிதன் தன்னலத்தால் தான் தனித்தனி உடைமை யாயது.

கப்பல் வருமுன் கடலும் பொதுவாக இருந்ததே. வானூர்தி வருமுன் வானமும் உலகப் பொதுவாக இருந்ததே. மனிதன் வளர வளர ஒப்புரவு தளரத்தளர ஆயது. அறிவின் விளைவு என்பது பொருந்தாது அது. அறிவைக் கொண்டவன் தன்னல மூளையின், அழிவின் விளைவு அது. அறிவு - மெய்யான அறிவு - அழிவுக்குப் பயன்படாது; அழிவுக்குப் பயன்படுத்தாது; பயன்படுத்துவாரையும் தடுத்து நிறுத்துவது அறிவு.

ஐன்சுதீனார் அணுவைக் கண்டார். ஆக்கத்திற்கே பயன்பட வேண்டும் என எண்ணிப் படைத்தார். அது போர் வெறியர் கையில் சிக்கியது; பேரழிவுகளுக்கும் இடமாக இருப்பதையும் உலகம் கண்டு வருகிறது. அணுவே இனி ஆக்கம் செய்யும் என்று எண்ணி ஆக்குவது கூட அழிவே செய்யும் என்னும் நிலை பொதுமக்கள் அறிவறிந்த

சான்றோர்கள் - ஆகியோர்க்கு உண்டாகி விட்டது. அணு உலை ஆகாது எனப் போராடவும், பாதுகாப்பாக வைத்திருக்கும் அணுக்குண்டையும் செயல்படாமல் அழித்து உலகைக் காக்க வேண்டும் என்னும் குரல் அமைதியாளர் குரலாகியுள்ளது. செயல்படாமல் அழிப்பதில் கூட அழிவைத் தடுத்து விட முடியாது என்னும் ஆழ்ந்த கருத்தும் உண்டாகியுள்ளது.

இவையெல்லாம் ஒப்புரவு அறிதல் இல்லாமையால் உலகுக்கு உண்டாகும் கேடுகளாம். பழநாளில் என்று நெடுந்தொலைவுக்குப் போக வேண்டியதில்லை. இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை கூடத் தமிழகத்துச் சிற்றூர்களில் ஒப்புரவு மணம் கமழ்ந்தது; ஒப்புரவுத் தென்றல் விசிறியது; ஒப்புரவு நிலவுக்கதிர் பொழிந்தது. சிற்றூர்களெல்லாம் ஒப்புரவின் ஆட்சி குறைவின்றி நடந்தது. போலிக்கல்வி பெருகியது; போலிச்சடங்கு விரிந்தது; போலி நாகரிகம் இறக்குமதியாயிற்று; புதுமை மோகம் பொறிபுலன்களைக் கெடுத்தது; அயலாளர் ஆட்சியால் நாடே பலநூற்றாண்டுக்காலம் கொத்தடிமைப்பட்டுப் பண் பாட்டுக்கேடாம் கல்வியும் நாகரிகமும் கூத்தாடின! மறைந்த ஒப்புரவை தோண்டி எடுப்பது போல் ஒப்புரவின் பொருளையும் தேடிக் காணும் சிறுமை உண்டாகிவிட்டது.

ஒரு வீட்டுத் திருமணம்! அஃது, ஊர்த்திருமணம் ஆகிவிடும்! எந்த வீடு ஆயினும் விலக்கில்லாமல் அப்படி இருக்கும். வீட்டு முற்றத்தில் பந்தல் போடுவார்; மாங்குழை மாவிலை தென்னை ஓலை வாழைமரம் அசோகந்தளிர் ஆகிய எல்லாமும் எவரெவரோ கொண்டு வருவார்; அவர் வீட்டுவேலையாகப் பார்ப்பார்; மகளிர் கூடிச் சமைப்பர்; ஒவ்வொருவர் தோட்டத்துக் காய்களும் கொண்டு வருவர்; பத்தடுப்பு பதினைந்து அடுப்பு மூட்டுவர்; பெரிய அண்டாச் சமையல் என்றால் இரண்டு மூன்று அடுப்புகள் பெரிய பெரிய அளவில் மும்மூன்று கல்லை வைத்து ஆக்குவர்; வடிப்பதற்குக்

கொட்டிப்பரப்புவதற்கு, ஆண்கள் உதவுவர். இலை பரப்பிப் படைக்க இளையகாளைகள் முன்னிற்பர். ஊர்ப் பெரியவர்கள் கூடியிருக்கப் பொதுக்கடமை செய்து பழகிப் போன மகளிர் திருமணச் சடங்கு நடத்துவர். மாப்பிள்ளையிடம் மொய் எனவும் பெண்ணிடம் சுருள் எனவும் பணம் வெற்றிலைச் சுருளுள் வைத்து வழங்குவர். அயலூரரார்க்கு முதலில் இலைபாக்கு வழங்குவர்; பிறகு உள்ளூரரார்க்கு வழங்குவர்.

திருமணம் இரவுப் பொழுதில், பகல் வேலை யெல்லாம் முடித்துவந்தபின் - ஓய்வாக நிகழும். மணமக்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீடு விருந்து வழங்கும், மருவீடு, எதிர்வீடு என அழைப்புத் தொடரும். ஒருகுடும்பப் பாரம், ஊர்ப்பாரமாய் மூடைத் தேங்காயை ஒவ்வொருவர் கையிலும் ஒரு தேங்காய் எடுத்தது போல் பாரமில்லாச் சுமையாய் எளிதாய் நிகழும்! ஒருவர் வீட்டு இழப்பானாலும் ஒருவர் புதுவீடு கட்டினாலும் ஒரு பெண் பூப்படைந்தாலும், ஊர்ப்பொதுக் கூடிச் செய்வதாகவே அமைந்து விடும்! இதுதான் **ஒப்புரவு - சமுதாய ஒப்பந்தம்** எனப்படுபவை.

உழவர்கள் நிலத்தை உழுவர்; பாத்திகட்டுவர்; பாத்தியில் மேடுபள்ளம் இல்லாமல் சமன் செய்வர். மேடுபள்ளம் இருந்தால் மேட்டில் தண்ணீர் ஏறாது; பள்ளத்தில் நீர்தேங்கும். முன்னது முளையாமல் போகும்; முளைத்தாலும் காய்ந்து பட்டுப்போகச் செய்யும். பின்னது, நீர் தேங்கி விதை முளையாமல் அழுகிப்போகும்.

நிலம் ஒப்புரவாக இருந்தால் எல்லாப் பக்கமும் சமமாகப் பயிர் முளைத்து வளர்ந்து பயன் செய்யும். இப்பொதுநிலையே ஒப்புரவு ஆகும். எல்லாரும் ஒத்த பிறப்பினர்; ஒத்தவராகக் கருதி உரிய வாழ்வு வாழ்பவர்; எல்லாரும் எல்லா நலங்களுடனும் வாழ வேண்டும் என்னும் வாழ்வு ஒப்புரவு வாழ்வாகும். அதற்கு ஏற்ப ஒவ்வொரு வரையும் தம்மைப் போலவே மதித்து வாழ்வது ஒப்புரவுடன் ஒழுகுவதாகும்.

**"ஒத்த தறிவான் உயிர்வான்"** என்பார் வள்ளுவர்

ஊருள் பழுத்த பழமரப் பயன் ஊருக்குப் பொதுவாவது போலவும்,

ஊருக்குப் பொதுவாக அமைந்த ஊருணி நீர் ஊருக்குப் பொதுவாகப் பயன்படுவது போலவும் எல்லாருக்கும் எல்லாமும் என எல்லாரும் ஒத்து வாழ்வதே ஒப்புரவு வாழ்வாகும்.

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எல்லாரும்"

ஒரு நிலையராகி வாழும் வாழ்வே ஒப்புரவு என்பார் வள்ளலார் பெருமான்.

அவ்வெண்ணத்தில் இயற்கையோடு இயைந்து இனிய ஆய்வு செய்து இயங்கியல் நிலையொடு பொருந்தக்கண்ட பொதுமைப் பொருளறமே கார்ல் மார்க்சு என்னும் பேரறிஞரால் 'பொதுவுடைமை' க் கோட்பாடு எனக் கண்டு உலகுக்குக் கொடையாக்கப்பட்டது.

உரூசோ என்பாரால் சமுதாய ஒப்பந்தம் என்னும் 'சோசலிசம்' உலகுக்கு வழங்கப்பட்டது.

வள்ளலார் பெருமகனாரால் 'சன்மார்க்கம்' என்னும் பொதுநிலை யறநெறி வாய்க்கப்பட்டது. உலகம் பொதுமையாய் அமைந்தது; பொதுமையை உலகப் பெருஞ்சிந்தனையாளர்கள் விரும்புகின்றனர். ஆனால், தன்னலம் போர் வெறி செருக்கு முதலிய தடைகள் எழும்பி எதிரிட்டுத் தடையாகவும் பேரழிவாகவும் நிகழ்தல் நடந்து கொண்டும் இருக்கவே செய்கின்றது.

ஆழ்ந்த சிந்தனையும் பொது நலப்பார்வையும் துணிந்த முடிவும் கொண்டால் உலகம் ஒப்புரவாதல் உறுதியாகும். ஒப்புரவாக்கம் வேண்டும் என்பதன் அடையாளப் படுத்தலாக உள்ளதே ஒன்றிய நாடுகளின் அமைப்பு! அதுவே ஒன்றியதாம் பார்வைப்பக்கம் நில்லாமல், வல்லரசுகளின் சார்புப் பார்வைக்கே உட்பட்டதாயிற்று. அவ்வமைப்பிலுள்ளார்

முழுதுறு பொதுமை நிலை ஒப்படைப்பு இல்லாதவராக இருப்பதால் உரிய பயனைச் செய்யவில்லை என்பது உண்மை நிலையாம்.

பொதுவுடைமையைச் சொல்லிக் கொண்டு உலகையே விழுங்கப் பார்க்கும் பெருவாய் முதலையாக ஒருநாடு இருக்குமானால் ஒப்புரவுக் குழந்தை அதன் வாயில் இருந்து வெளிவந்து மீண்டு நடையிடல் அவ்வளவு எளியதா? ஆனால், வள்ளுவம் ஓர் அரியவகை காட்டுகிறது. அது,

> **"அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்**
> **பெருமை முயற்சி தரும்"**

என்பது. முடியாது எனச் சோர்வுறாதே! முடியுமென அயராமல் உழை! வெற்றி வாய்க்கும் என்பது இதன் பொருள். ஒப்புரவு ஒழுகுதற்கு ஒவ்வொருவரும் முடிவு செய்தால் ஒருநாள் உலகமுடிவு ஆகும். முதல் நிலை தனிமாந்தர் ஒப்புரவொழுகுதல். நிறைநிலை உலக ஒப்புரவு அமைதல்!

❖❖❖

## 8. கூடிப் பிரியேல்

பொதுக்கூட்டம் ஆய்வுக்கூட்டம் காட்சிக் கூட்டம் ஆகியவற்றுக்கு மக்கள் கூடுகிறார்கள். கூட்டம் முடிந்ததும் பிரிகிறார்கள். திருவிழா திருமணம் சந்தை ஆயவற்றிலும் கூடிப் பிரிகிறார்கள். இக்கூடிப் பிரிதல் அஃதன்று.

கூடுதல் என்பது, நண்பனைக் கூட்டாளி என்பதால் பொருள் புலப்படும். கூட்டுறவு, கூட்டுக்குடும்பம், கூட்டுப்பங்கு, கூட்டுக்கறி, கூட்டாஞ்சோறு என்பவை எல்லாம் கூட்டுவகையனவே. இங்கே ஒருவனைக் கூட்டாளியாகக் கொண்டு நெடுநாள் பழகி விட்டு அவனை இயற்கையாலோ தக்க காரணங்களாலோ பிரிய நேர்ந்தால் அல்லாமல் நீயாகவோ அவனாகவோ பிரிதல் ஆகாது என்பதாம்.

கூட்டாளியாக ஒருவரைக் கொள்ளுமுன் எவ்வளவு வேண்டும் எனினும் எண்ணிப் பார்க்கலாம்; ஆய்ந்து பார்க்கலாம்; அவற்றில் தவறு இல்லை. ஆனால் கூடிப்பழகி நட்பாகிவிட்டு அந்நட்பை விட்டுப் பிரிந்து விடுதல் இருபக்கத்தும் கேடாம்; இழிவுமாம்; பலர் பழிக்கவும் இடமாம்! ஆதலால், கூடி நட்புக்கொண்டபின் பிரிதல் கூடாது என்றார்.

இதே கருத்தைத் திருவள்ளுவர் விளக்கமாகக் கூறுகிறார்.

**“நாடாது நட்டலில் கேடில்லை நட்டபின்**
**வீடில்லை நட்பாள் பவர்க்கு”**

என்பது அது. ஆராயாது நட்புச் செய்தல் கூடாது. அப்படி ஆராயாமல் தகுதியில்லாதவர்களோடு நட்புச் செய்து விட்டால் அத்தகுதியில்லாதவர் தன்மையெல்லாம் உனக்கும் வந்துவிடும். நீ அதை விட்டு விடுதலை அடையவே முடியாமல் அத்தகவு இல்லாமை உன்னைப் பற்றிக் கொள்ளும் என்றார். இது நட்பாராய்தல்.

அதிகாரத்தின் பெயரே **'கூடா நட்பு'** என்று கொண்டு ஓர் அதிகாரம் பாடினார். கொள்ளக் கூடாத நட்பு, கூடா நட்பாம். நட்பாராய்தல், தீ நட்பு, நட்பு, பழைமை என்றெல்லாம் மிக விரிய விரிய ஆய்கிறார் திருவள்ளுவர். இவையெல்லாம் அதிகாரப் பெயர்கள். உரையாசிரியர்களால் நட்பியல் என்னும் ஓரியலே கொள்ளப்பட்டது.

கூடிப் பிரியேல் என்பதன் உரைவிளக்கம் போலப் நற்றிணை என்னும் நூல் (32),

**"நாடி நட்பின் அல்லது**
**நட்டு நாடார் ஒட்டியோர் திறத்தே"**

என்று கூறுகிறது. ஓட்டியோர், நட்பால் ஒன்றியவர்.

"ஆராய்ந்து நட்புச் செய்க ; நட்புச் செய்துவிட்டு ஆராயாதே" என்பது இதன் பொருளாம்.

கூடுதல் என்பது உள்ளத்தால் ஒன்றுபடுதல். உள்ளொன்று புறமொன்று இல்லாமல் ஒன்றுபடுதல். வள்ளலார் கருத்துப்படி "புணர்ந்து கலந்து ஒன்றாகிப் பொருந்துதல்".

தக்கார் தக்காரோடு கூடுவர். அக்கூட்டம் ஒருவருக்கு ஒருவர் துணையாதல் மட்டுமன்று; துலங்குதலுமாகும்.

புறநானூற்றுப் புலவர்,

**"சான்றோர் சான்றோர் பாலர் ஆப**
**சாலார் சாலார் பாலரா குபவே"**

என்பார். அவரே,

**"பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய**
**மாமலைப் பயந்த காமரு மணியும்**
**இடைப்படச் சேய வாயினும் தொடைப்புணர்ந்து**
**அருவிலை நன்கலம் அமைக்கும் காலை**
**ஒருவழித் தோன்றி யாங்கு"**

என உவமை காட்டுவார். அணிகலம் ஒன்று; அதில் பொன் பவழம் முத்து மணி ஆயவை உள; அவை ஒரே மாலையில்

அமைந்து அழகு செய்கின்றன. அவை கிடைக்குமிடமோ வெவ்வேறான இடம்! சேர்ந்து விளங்கும் இடமோ ஒன்று! அதில் ஒருமணி அல்லது முத்து உதிர்ந்தால் அவற்றுக்கு அழகாகுமா?

கூடிப் பிரிந்தால் ஒருவர் குறையாக மாட்டாது; இருவர் குறையுமாகவே சொல்லப்படும்.

**"ஒருவர் பொறை இருவர் நட்பு"**

எவராவது ஒருவர் மிகத்தக்கோர் எனின், தகவிலாரை நட்பாகக் கொண்டிரார். கொண்டு விட்டால் பிரிந்து போகாமல் தக்க வகையால் விட்டுக் கொடுத்து, விளக்கம் புரிந்து நட்பாகவே இருப்பார்.

கூடியவர் பிரிதலால் என்ன ஆகும். அது, உண்மையாக உள்ள பகையினும் கேடான பகையாம். குற்றங்குறை சோர்வு நிலை முதலியவை எல்லாமும் தெரிந்து கொண்ட பகையாக அமைந்து விடும். உட்பகை என்ன கேடு செய்யுமோ அக் கேட்டை எல்லாம் செய்யும்.

கூடியிருந்தவர் பிரிந்தால் என்ன செய்வார்? கூடியிருந்தாரே அவர்க்குப் பகையாவார் எவரோ அவரை நட்பாகக் கொள்வார். நேரிட்டபகை ஒன்று; பிரிந்து போன கூட்டுப் பகை ஒன்று! இரட்டைப் பகை இல்லை! இது பன்முகக் கேட்டுப் பகையாகிவிடும். ஆதலால், கூடிப் பிரிதல் கூடாது என்றார்.

கூடியிருந்து பிரிந்தவர் ஒதுங்குவது போல் ஒதுங்கிப் போய்க் காட்டிக் கொடுத்துப் பழிவாங்குபவர் ஆகி விடுவார். பழைய நட்பை எள்ளத்தனை எண்ணார்! அழிப்பதிலேயே எண்ணம் வைப்பார்! இல்லாத பொல்லாத பழிபரப்பாளி ஆவார்! அவரை விட்டுத் தொலைக்காமல் ஒட்டியாவது வைத்திருக்கத் தவறி விட்டோமே என்று மனம்நையச் செய்வார்!

*இவ்வளவும் எண்ணிச் சொன்னாரா?*
*எண்ணச் சொல்கிறாரா, இல்லையா?*
*இதற்குச் சான்றுதான் ஒன்றா இரண்டா?*
*உங்கள் உங்களுக்கே சான்றுகள் புலப்படும்!*

கூடியிருப்பவர் அவர் பகைவர் கண்ணைக் கலக்கும்; கருத்தைக் கலக்கும்; உயிரொத்த நட்பினராக இருப்பினும் அவரைப் பிரிக்கச் சூழ்ச்சி வலை விரிக்கும். பிரிந்து போதற்கு வேண்டும் கரவு வழிகளை யெல்லாம் தெரிந்து தெளிவாகச் செய்யும். வெற்றியும் பெறும்; பிரிந்தவரைத் தேடிப்போய் உறவும் கொள்ளும்; ஓடிப் போய் உதவியும் செய்யும். முழுதுறத் தன் கூட்டாக்கிக் கொண்டு மூட்டுவன வெல்லாம் மூட்டிவிடும்! மூட்டப்பட்ட மூடமாய் முட்டத் துணிவு ஏற்படுத்தும்! முட்டும் வழியும் வகையும் காட்டும்! வெற்றியும் பெறும்! அரசியல் வேடர்கள் செய்வன வெல்லாம் எண்ணுங்கள்! கூடிப் பிரிந்த - கூடிப்பிரித்த - கேடாகவே முடியும்! நட்பின் மூலக் கல்வி ஒருவரை ஆராயாமல் கூடாதே! கூட்டாகி நின்றுவிட்டால் கூட்டில் பிரியாதே! பிரிந்தால் ஒரு கேடனை ஒதுக்கிவிட்டதால் ஒன்பது பகைகளை நீயே தேடிக் கொண்டு உன் அழிவுக்கு நீயே காரணம் ஆவாய்!

வீடுகளைப்பாருங்கள்! நாடுகளைப்பாருங்கள்! விரிய விரியப் பாருங்கள்! விடிவெள்ளி வெளிச்சம் போலப் புலப்படுவது கூடிப்பிரிந்த - கூடிப்பிரித்த - கேடே என்பது வெளிப்படும்.

*பட்டபின் அறிந்து பயன் என்?*
*படுமுன் பாட்டி சொல்லைக் கேட்டு நடந்தால்*
*பயனாம்! பழியும் இல்லையாம்! பாவமும் இல்லையாம்!*
*பயனோ, பலர்க்கும் எடுத்துக் காட்டாம்!*

❖❖❖

## 9. கேள்வி முயல்

இத்தொடர் ஔவையார் இயற்றிய ஆத்திசூடியில் உள்ளது. இது தொடரா, பாட்டா?

பாட்டு என்பார் பாட்டிலக்கணம் எழுதிய பாட்டர் தொல்காப்பியர். "அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே" என்பது அவர் கூறியது.

இது, அடியா? அடியே! இரு சீரடி அல்லது குறளடி. ஆதலால் சிறந்த குறளடியாம் இது பாட்டேயாகும்.

இப்பொழுது துளிப்பா என வழங்குகின்றது. ஒரு புதுவகைப்பா. ஆனால், பழைமையான தொல்காப்பிய வழியிலே ஔவையார் எழுதிய துளிப்பா இது. இப்படி ஒன்றன்று. இரண்டல்ல! நூற்றெட்டு எழுதினார். அதில் ஒன்றே (39) இது!

நாம் இப்பொழுது கேள்வி என்பதன் பொருள் புரியாமல் "என்னைக் கேள்வி கேட்கிறாய்?" "இக்கேள்விக்கு விடை என்ன?" என்றெல்லாம் பயன்படுத்துகிறோம்.

திருக்குறளில் கேள்வி என்பது ஓர் அதிகாரம். பிறர் சொல்வதைக் கேட்பது கேள்வியாகும். பிறரை மறுமொழி கூறுமாறு சொல்வது வினா! இவ்வினாவுக்கு விடை என்ன? என்பதே சரியானது.

நன்னூல் இலக்கணத்தில் 'வினா வகை' எனவும் 'விடை வகை' எனவும் நூற்பாக்கள் உண்டு. எனக்கு வினாத் தெரிந்த கால முதல் என்பது மக்கள் வழக்கு. வினாத் தெரிந்த காலம் என்பது வினாவி அறியத் தெரிந்த காலம் என்னும் பொருளதாம்!

ஆதலால், கேள்வி வேறு, வினா வேறு என அறிய வேண்டும்.

"வாய்மை எனப்படுவது யாது?"

என்பது வினா. ஏனெனில், என்ன, எது, யாது, எங்கே, ஏன், எப்படி, எதற்கு, எப்பொழுது, எவ்வாறு என்பவை வினாக்களாம். உலகப் பொதுக் குறியீட்டு மொழி தோன்று முன்னரே மனிதர் ஒன்றை அறிவதற்குக் கைக்குறி செய்தவகையில் உண்டாகியது அது.

இனிக் "கேள்வி முயல்" என்பதைப் பார்ப்போம்.

"கற்றலில் கேட்டலே நன்று"

என்பது எவரும் அறிந்தது. கற்பதற்கு நூலும் வாய்ப்பும் வேண்டும். பணமும் செலவாம்; காலமும் மிகவாம். ஒருவர் சொல்லும் நல்லுரையைக் கேட்பதற்குச் செவியிருந்தால் போதும்! கேட்க வேண்டும் என்னும் ஆர்வம் இருந்தால் போதும்; அது தான், பசித்தவன் உண்ண விரும்புவது போலவும், நீர் வேட்கை யுடையவன் தண்ணீர் பருக விரும்புவது போலவும் கேட்கத் தூண்டும்.

**"பருகுவன் அன்ன ஆர்வத்த னாகி"**

என்று சொல்லும் நன்னூல்!

கேட்பதற்குச் செவிதான் வாய்; மனம்தான் சேர்த்து வைக்கும் இடம்! என்றும் கூறுவார்.

கேட்டதை மறக்கக் கூடாது; மறந்து விட்டால் கேட்டதற்கும் கேட்காததற்கும் என்ன வேறுபாடு?

அதனால், **"கேட்டது கேட்டது விடாது உளத்து அமைத்து"** என்றார்.

"உள்ளத்தில் கேட்ட செய்தி இருந்தால் போதுமா?

அவ்வாறானால் உள்ளத்தில் வைத்ததன் பயன் என்ன? அதனால், வேண்டும் இடங்களில் பிறரும் நன்றாகக் கேட்டுப் பயன் பெற வேண்டும் என்னும் நல்ல எண்ணத்துடன் கேட்க வேண்டும். தனக்காகக் கேளாமல் பிறர் நன்மைக்காகவும் கேட்டதாக அமையும்! அஃது இரட்டை நலமாம்!"

கேள் என்ற அளவில் நில்லாமல் கேள்வி முயல் என்றார் பாட்டி.

முயற்சி திருவினை ஆக்கும். திரு என்பது செல்வம் ஆக்கம் நன்மை முதலிய பொருள் தரும் சொல். செல்வத்தைச் சேர்க்க என்ன உழைப்பு உழைக்கிறோம்? எப்பாடு படுகிறோம்! எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் கொள்கிறோம். தேடிய செல்வத்தையும் எப்படிச் சிக்கனமாகச் செலவிட்டு, மீதத்தைச் சேமித்து வைக்கிறோம்! அச் செல்வம்கூடச் செய்யாத நலங்களைச் செய்வது கேள்வி! அதனால் கேள்வியைச் செல்வம் என்றார் திருவள்ளுவர். செல்வத்திலும் உயர்ந்த செல்வம் என்றார். அச்செல்வம் வைரத் தோட்டைப் பார்க்கிலும் உயர்ந்த செல்வம் என மதிப்பிட்டார். ஏனெனில் வைரத் தோட்டால் கேடு வந்தாலும் வரும்! களவு போனாலும் போகும். ஆனால் கேள்விச் செல்வம் நாம் பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்க நம்மிடமும் பெருகும்! அதனைக் கேட்டுப் பெற்றவரிடமும் பெருகும்; களவாடிக் கொள்ளவும் முடியாது. ஆதலால்,

**"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை"**

என்றார்.

கேள்வியைச் செல்வமாகக் கூறியவர் 'செவிச் செல்வம்' என்றார். செவிப்புலன் குறைந்தாரும் இப்பொழுது கேட்டறியப் பொறிகள் வந்துவிட்டன. முழுவதாகக் காது கேளாதவரும் பேரறிவாளராக உலகில் விளங்கியுள்ளனர்; விளங்கியும் வருகின்றனர். அதனால் கேள்விச் செல்வத்தின் சிறப்பு விளங்கும்.

வழுக்கல் நிலத்தில் நடப்பவர்க்கு ஊன்று கோல் உதவுவது போல் கேள்விச் செல்வம் உதவும்.

வான் வறண்ட காலத்திலும் தான் வறளாமல் நீர் சுரக்கும் ஊற்றுப் போல் கேள்வி பயன் தரும்.

எதைக் கேட்க வேண்டும் என்றால் திருவள்ளுவர் எவ்வளவு சிறிதாக - குறைவாகக் கேட்டாலும் நல்லதையே கேட்க வேண்டும் என்பதை,

**"எனைத்தானும் நல்லவை கேட்க"**

என்றார்.

கேள்வி அறிவுப் பயன் பெரிதும் விரிவானதுமாம் என்பதை நாலடியார் கூறும்;

கிணற்றுத் தவளைக்குத் தான் இருக்கும் கிணறே பேரளவு உலகமாகவும் உயர்ந்ததாகவும் தெரியும். அதுபோல் கேள்வி அறிவு இல்லாதவர்க்குத் தாம் கற்ற கல்வி விரிவானது பெருமை மிக்கது என்ன நினைத்து விரிவிலா அறிவினராக இருப்பர் என்பது அது. பழங்காலக் கல்வி பெரிதும் கேள்வி வழியாகவே ஏற்பட்டது. முறை சொல்லல் பாடம் சொல்லல் என்பர்.

பெரிய மாணவர்கள், "அறஞ் செய விரும்பு" என்று சொல்வர். எழுத்தறிவே இல்லாத இளம் பாலர்கள் திரும்பச் சொல்வர். அப்படி ஒவ்வொரு நாளும் முறை சொல்லும் பழக்கத்தால் எழுத்தறிவு பெறுமுன்னரே ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலியவற்றை மனப்பாடமாக ஒப்பிக்கத் தெரிந்து கொள்வார்கள், எண் வாய்பாடும் எளிதில் வரப்பெறுவர்.

கேள்விச் செல்வத்தை எப்பொழுதும் எங்கும் எவரிடமும் தக்கதாயின் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காகவே இயற்கை எப்பொழுதும் மூடாமல் திறந்தும் விரிந்தும் உள்ள செவிகளைத் தந்துள்ளது என்பதை எண்ணினால் வியப்பாக இருக்கிறது அல்லவா!

❖❖❖

## 10. கைவினை கரவேல்

ஔவையார் எத்தகு பட்டறிவாளர் - தொழில் வளர்ச்சி ஆர்வலர் - உழைப்பின் அக்கறையர் - உலக மேம்பாடு உணர்ந்தவர் என்பனவற்றுக் கெல்லாம் மூலமான தொடர். இத்தொடர். வினை - தலைவிதி என்று கட்டியழும் உலகில் "செய்வினை" என்னும் செய்யா வினையைத் தலைமேல் பிரிபிரியாகச் சுற்றி அறிவறியா மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் உலகத்தில் கைத்தொழிலைப் பற்றி எண்ணிப் பார்க்கிறார்.

உழவு பாடினார் வள்ளுவர்; ஏரெழுபது, திருக்கை வழக்கம் என்பவற்றைப் பாடினார் கம்பர்: "கைவினை கரவேல்" என்னும் குறளடிப்பாவால் வெற்றிக் கொடி நாட்டுகிறார் ஔவையார்.

அவர் காலம், கரவு வாழ்க்கை அன்று; அவர்க்கு - கைவினை கரவேல் என்று பாடிய ஔவையார் காலத்திற்கு - முற்படவே, கைவினையில் உயர் வினையாம் மருத்துவவினை கரந்தமையைக் கலித்தொகை பாடுகின்றது.

சாவக் கிடக்கும் ஒருவனை எழுப்பவல்ல மருந்துகண்ட மருத்துவன் ஒருவன், தான் சாகும் அளவும் எவர்க்கும் சொல்லித் தராமலே செத்துப் போனான்! இது எத்தகைய பெருங் கொடுமை என்கிறது கலித்தொகை! அதனை "மருந்து அறை கோடல்" என்கிறது! அறை கோடலாவது மறைத்துவிடுதல்!

உலக நலம் - உயிர் நலம் காக்க வேண்டிய மருத்துவனே தான் கண்டறிந்த மருந்தை எவருக்குமே சொல்லாமல் பயிற்றாமல் போனது உலகப் பேரிழப்பு இல்லையா? அம்மருந்தைக் காணாமல் இருந்திருந்தால் கூட அவனுக்குப் பழியில்லாமல் போயிருக்குமே! பழிப்பிறப்பு என்பதை உலகறியச் செய்வதற்காகவா பிறந்தான்?

எத்தனை எத்தனை நுண்ணிய பொறியியல், வானியல், தொழிலியல், மருத்துவ இயல், கலை இயல்கள் - வல்லார் வாய் திறவாமல் - எழுதிவைக்காமல் இக்கலைவளங்கள் ஒழிந்து போயின? மேலை நாடுகளில் ஏற்பட்ட அறிவியல் புரட்சி - தொழிலியல் புரட்சி எந்த நூற்றாண்டில் ஏற்பட்டது? தமிழகத்தில் எந்நாளில் ஏற்பட்டது?

செடி, கொடி, புல்பூண்டு மரம் முதலியவற்றுக்கு உயிருண்டு. அது ஓரறிவு உயிர் - **"ஒன்றறிவதுவே உற்றறி வதுவே"** என்றார் தொல்காப்பியர். அதனைக் கருவியால் மெய்ப்பித்தார் சகதீச சந்திர போசு. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். தொல்காப்பியர் சொல்லியதை மெய்ப்பிக்கும் அறிவியலாளர் தமிழகத்துத் தோன்றவில்லை!

**"நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்"**

என்றார் தொல்காப்பியர். அதையும் அறிவியலாகக் கொள்ள வில்லை. கற்றவரும் இலக்கணங் கண்டனர்; மற்றவரோ கருதவே இலர்.

புறநானூற்றில் (30)

**"செஞ்ஞாயிற்றுச் செலவும்அஞ் ஞாயிற்றுப்**
**பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்**
**வளிதிரிதரு திசையும்,**
**வறிது நிலைஇய காயமும் என்றிவை**
**சென்று அளந்து அறிந்தோர் போல**
**இனைத்தென் போரும் உளரே"**

என்பதையும்,

**"உண்டைப்பிறக்கம் அண்டம்;**
**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன**
**இல்நுழை கதிரின் துன் அணுப் புரைய"**

என்னும் மணிவாசக நுண்மைகளையும்,

போகரின் வானக்குடை முதலாம் அறிவியலையும் வியப்பாய்ப் படித்து - வியப்பாய்ச் சொல்லி - நின்றனரே யன்றி, ஆய்ந்து உலகுக்குக் காட்டினர் அல்லர்!

உலகம், வையகம், பொறி, புலன் முதலாம் சொற்கள் அறிவியல் வளங்கொண்டவை என்பதை அறிந்து உண்மை உலகுக் கறிவித்தார் அல்லர். இவை நம் மறைப்பும் அறியாமையும் ஒழிப்புமாகவே மறைந்தன.

கற்கத் தக்கார் இவர், கற்பிக்கத் தக்கார் இவர், கற்கவே கூடாதவர் இவர் என்றெல்லாம் இலக்கணம் வகுத்த கீழ்மை, கலைகளையும் தொழில்களையும் துலங்காமல் செய்தன.

உலகத்தின் தாய் மருத்துவமாம் சித்தமருத்துவம் உலகப் பொருள் ஆக்கப்படவில்லை.

அரிதில் கண்டு பயன்படுத்திய போர்க்கருவிகள் இலக்கிய அளவில் அமைந்து விட்டன. சீரிய வேளாண் விளக்கமும் அணை கட்டித் தேக்கிய அறிவியல் வளமும் கட்டடம், நெயவு, கொல்லுத் தொழில் நுண்மங்களும் இசை கூத்து என்பனவும் நம்மவர் சொத்தென ஆகாமல் அயன்மைப்பட்டு அழிக்கப்பட்டன.

கற்ற கலையை மற்றவர் அறியவிடாச் சிறுமையால் நாம் இழந்த வளங்களை எண்ணியே கைவினை கரவேல் என்றார் ஔவையார்.

ஒரு நாட்டுக்கன்றி உலகமெலாம் வலம் வந்த கப்பல் கலையை நம் கலை ஆக்கினோமா?

முத்தமிழில் பின்னவை இரண்டையும் அயலவர் வழியவை என நாமே சொல்லிக் கொள்ளும் மடமை எந்நாட்டில் எம்மொழியில் உண்டு?

**“பாலாடை அன்ன மேலாடை”** நிலை என்ன?
**“பூணி இன்றியும் பொறியின் இயங்கும்**
**மாண்வையம்”**
என்பன என்ன ஆயின?

தமிழர் கைவினை மறந்த - மறைத்த சிறுமை, உலகம் எள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டதாம்!

கருமருந்தும் இரும்பும் தங்கமும் வெள்ளியும் அரும்பாடு பட்டுக் கண்டது தமிழகம்! அயலார் துமுக்கிக்கு அடிபணிந்துவிட்ட அடிமை நிலை முந்நூறு ஆண்டு முடங்கிப் போய் அயன்மைபட்ட நிலையெல்லாம் கைவினை கரந்த விளைவு என எண்ணின் ஔவை மொழி அருமை புலப்படும்.

இப்பொழுது கருமாயம், கழிப்பு, செய்வினை, சோதிடம் கண்மூடிச் சடங்கு, மொழி இன மண் பற்றிலாச் சிறுமை, கொத்தடிமை, இலவசம், பிச்சை , கடத்தல், கையூட்டு, பகல்கொள்ளை, பள்ளிக் கொள்ளை என்பனவெல்லாம் தமிழர், பாட்டிசொல் கேட்டு நடவா - கடைபிடியாச் சிறுமையால் விளைந்தவை என்பதை எண்ணினால், 'ஆத்திசூடி' **கலங்கரை விளக்கு** மட்டுமன்று **செங்கதிர்ச் செழுவிளக்கம்** என்பது புலப்படும்!

"கிழவி சொல்லைக் கின்னரிக் காரன் கேட்பானா" என்பது பழமொழி. பாட்டி சொல்லைக் கேட்டு நடந்திருந்தால் இப்படிக் கெட்டுக் கிடந்திருக்க மாட்டோம் என்பது உறுதியாம்.

❖❖❖

# 11. கோதாட்டு ஒழி

கோது ஆட்டு ஒழி என்னும் மூன்று சொற்களின் கூட்டுத் தொடர் இது. கோதாட் டொழி என்பதற்கு யான் எழுதிய அகல் விளக்கு உரையை அப்படியே எழுதுகிறேன். அதன் மேல் விளக்கமாகவும் சில எழுதுகின்றேன்.

"பொருள்! கோது = குற்றம். கோதாட்டொழி. குற்றத்திற்குரிய ஆட்ட பாட்டங்களை நெருங்காமல் விட்டொழிப்பாயாக

விளக்கம் :

விளையாட்டு என்பது பயனுடையது. பல நல்லவற்றுக்கு இடமாக இருப்பது விளையாகும். விளையாவது விளைநிலம் உடல் நலம், உளநலம், கூட்டுறவு, நாட்டுறவு இன்னவற்றை உண்டாக்கும் உயர்வினது அது. அவ்விளையாட்டின் நலத்தைக் கொள்ளாமல் பொழுதுபோக்கு எனவும் பொருள் அழிப்பு எனவும் கேடான ஒழுக்கத்திற்கு இட்டுச் செல்வது எனவும், உயிரைப் பறிப்பது எனவும் பாழாக்கும் ஆட்டங்களை விரும்புதல் ஆகாது என்பதாம்.

குதிரைப் பந்தயம், சேவல் சண்டை, காமக் களியாட்டு என்பவற்றை எண்ணினால் - ஔவையார் காலத்தொடும் எண்ணினால் - இந்நாளில் பெருக்கம் பன்னூறாகி மலிகின்றன. திருவிழாக்கள் கண்காட்சிகள் என்பவை இவற்றின் நாற்றங்கால்களாக உள்ளன.

யார் படத்தொடு யார் படத்தையோ இணைத்தல், உறுப்புகளை வெட்டி ஒட்டல், பாலியல் படம் எடுத்துப் பணம் பறித்தல் இன்ன வெல்லாம் இவ்வகைப்பட்டனவே.

கோது = சக்கை. சாறு எடுக்கப்பட்ட சக்கை. எரிபொருள் அது. இச்சொல்லமைதியே இதன் பொருள் விளக்கும் என்பது அது. இனி நாம் மேலே செல்வோம்.

பாரதியார் 'பாஞ்சாலி சபதம்' எனக் காலத்திற்கு ஏற்ற புதுக்காப்பியம் எழுதினார். பாரதக்கதையின் உயிர்ப்பான ஒரு பகுதி - நாடிழந்து காடேக - பெண்ணைப் பணையம் வைக்க நாடு அழிவு பட ஆயிரங்களான தருமங்கள் உணர்ந்த தருமக் கோமான், அவன் நாட்டு மாந்தரை எல்லாம் ஆட்டு மந்தையாய் எண்ணி விட்டான். ஆதலால் சூதுப் பணையப் பொருளாக நாட்டை வைத்து ஆடினான்.

நாடு இழந்த அளவில் நில்லாமல் தன் உடன் பிறந்த தம்பியர் நால்வரையும் பணையம் வைத்துத் தோற்றான். தன்னைப் பணையம் வைத்தும் தோற்றான். கடைசியில் ஐவர்க்கும் ஒருத்தியாம் பாஞ்சாலியையும் பணயம் வைத்தான்.

வீமன் கொதித்தெழுந்தான்! அருச்சுனனைப் பார்த்தான்; தம்பி என அழைத்தான்! 'அண்ணா' என்னுமுன், ஆணையிட்டான். "தம்பி தழல் கொண்டு வா" என்றான்.

**"கதிரை வைத்து இழந்தான் - அண்ணன்**
**கையை எரித்திடுவோம்"** என்றான்

அதனைக் கண்டுகொண்டு அரசவையோர் திருதராட்டிரன் கன்னன் துச்சாதனன் முதலோரும் இருந்தனர்.

திருதராட்டிரனுக்குக் கண்ணொளி இல்லை. ஆனால், அகக் கண்ணாம் அருட்கண்ணுமா ஒழிய வேண்டும் என்று கூறுவாராய்,

"அருட்கண் அழிவெய்திய பாதகப் பாதகப் பாதகன்" என்றார். கன்னன் சிரித்திட்டானாம், பாஞ்சாலியைச் சூதில் தோற்றதற்கு! ஆனால் வள்ளலாம் வள்ளல்! பொத்தல் சுவருக்கு வண்ணமும் வெள்ளையும் அடித்து வெளிச்சம் போட்டுக் காட்டுபவன் அவன் என்று, "புறம் சுவர் கோலம் செய்பவன்" என்றார் வில்லியார்.

துச்சாதனன் பாஞ்சாலியைத் தெருவில் இழுத்து வந்தான். ஊரவர் கூடினர். அரற்றினர். அவ்வெற்று அரற்றலை ஒப்பாத பாரதியார் ஊரவரை,

**"வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்துச் சேர்த்துப்
பொன்னை அவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்கள்என நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?"**

என்றார்! இது பார் புகழப் பரப்பப்பட்ட பாரதக்கதை!

இன்னொருவன் நளன்! இந்நளனும் சூதாடித் தன் நாட்டை இழந்தான். காட்டையடைந்தான். காட்டில் மனைவியைப் பிரிந்தும் சென்றான்!

இவ்வாறு,

**"நாடாண்ட மன்னரும் காடாண்டார் சூதினால்
ஏனோ எண்ணார் இதை?"**

என்று என் **'கைவிளக்கில்'** பாடினேன்.

'சூது விரும்பேல்' என்ற ஔவையாரே 'கோதாட்டொழி' என்றார்!

எவர் ஒழிக்க வேண்டும்! சான்றோர் ஒழிக்க வேண்டும். ஆள்வோர் ஒழிக்க வேண்டும்!

சான்றோர் சொல்வார்! அறிவுரை கூறுவார், ஆனால், சட்டம் இயற்றிச் சரியாகக் கண்காணித்து முற்றாக ஒழிக்க வேண்டியவர் ஆள்வோர்!

முடியரசர் காலத்திலும் குடியாட்சிக் காலத்தில் கட்டாயம் செய்ய வேண்டும். மக்களால் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சி செய்பவர்கள் அவர்கள், கோதாட்டு ஒழித்தார்களா?

நாட்டில் சூதாட்டம் என்பது ஒன்று மட்டுமோ? எத்தனை வகைச் சூதாட்டுகள் பெருகியுள!

பரிசுச்சீட்டு, குலுக்கல் சீட்டு சூதாட்டு இல்லையா? உலக விளையாட்டில் பந்தயம் கட்டும் சூதாட்டு இல்லையா? மதுக்குடி வழங்கிக் குடிகெடுத்தல் சூதாட்டிலும் கேடு இல்லையா?

குறும்படம் எடுத்தும், நீலப்படம் எடுத்தும், மனமகிழ் மன்றம் நடத்தியும் நாடழிய ஒப்புவது - அல்லது நடப்பதைக் காணாமல் விடுவது கோதாட்டு இல்லையா? தொலைக்காட்சி கெடுக்கும் பண்பாட்டுச் சிதைவையும் கண்மூடித்தனத்தையும் உழைப்பைக் கெடுப்பதையும் எவர் அறியார் இவற்றை யெல்லாம் ஆள்வோரே செய்தால் கோதாட்டு ஒழிவது எப்படி?

மண்கொள்ளை, மணற்கொள்ளை, மரக் கொள்ளை கையூட்டுக் கொள்ளை வாக்குச்சீட்டுக் கொள்ளை என எத்தனை வகைக் கொள்ளைகள், இவையெல்லாம் கோதாட்டு இல்யைா? ஒழிக்க வேண்டியவரே இதனைச் செய்தால் செய்யத் தூண்டினால் ஒழியுமா? ஊர் ஏரியை - புறம் போக்கு நிலத்தை - நத்தத்தை - மானிய நிலங்களை - கோயில் சொத்தைப் பறிக்கும் மண்பறிப்புப் பெரும் கோதாட்டு இல்லையா?

ஒன்று வாங்கினால் இலவசம் ஒன்று!
ஒருமனை வாங்கினால் - ஒரு சீலை எடுத்தால், ஒருமனை, ஒரு சீலை இலவசம் என்பது கோதாட்டு இல்லையா?

ஏலச்சீட்டு, கூட்டுப்பங்கு, இரட்டிப்புத் தொகை என மக்களிடம் இலக்கமும் கோடியுமாகப் பறித்து இரவோடு இரவாக இடத்தைக் காலி செய்து ஓட்டம் எடுப்பது கோதாட்டு இல்லையா? இவற்றைத் தனியாள் ஒழிக்க முடியுமா? காக்கக் கடன் பூண்ட காவல் துறைதானே செய்ய வேண்டும்! காவல் துறையே கண்டு கொள்ளாமல் விட்டால் - செய்யத் தூண்டினால் - செய்வதில் பங்கு கொண்டால் - அதில் ஆள்வோர்க்குப் பங்கு உண்டென்றால், எப்படி ஒழியும்!

சிறைக்குள் சிக்கிக்கிடப்பவர்கள் எல்லாரும் குற்றவாளிகளா? சிக்காதவர்கள் எவ்வளவு பெரிய பதவியர் - பணக்காரர் - அரசியலர் வெளியே திரிகின்றனர்!

கோதாட்டு ஒழிய மேலே - மேற்பதவியிலே இருப்பவர் திருந்தினால் அன்றிக் கீழே இருப்பவர் திருந்த வாய்ப்பில்லை!

"குடி - வீட்டையும் நாட்டையும் கெடுக்கும்"

என்று கடைவாயிலில் எழுதிப் போட்டுவிட்டு அக்கடைகளைத் திறக்கக் கூடா இடங்களில் எல்லாம் திறந்து விட்டு, கலைக்கழக மாணவ மாணவியர் வாயும் குடியாலும் போதையாலும் நாறவைக்கும் அரசு, கோதாட்டு ஒழிக்கவா செய்யும்?

'நாடே என்உயிர்' 'நாட்டு நலமே என்செயல்' எனக் கொண்ட வல்லாளர் தோன்றி ஆட்சிக் கட்டில் ஏறினால் அன்றிக் கோதாட்டு ஒழியாது! கோதாட்டு ஒழி என்பது ஆத்திசூடியில் மட்டும் இருக்கும்! அதிலும் இருக்கக் கூடாதெனப் பாடக்குழு நீக்கினாலும் வியப்பில்லை! ஏனெனில் எடுபிடிகள் தானே ஆள்பவர்க்கு வேண்டும்!

❖❖❖

## 12. சான்றோர் இனத்திரு

சால்பு எனப்படும் உயர்ந்த பண்புகளால் நிறைந்தோர் சான்றோர். அவர் நினைவு சொல் செயல் மூன்றும் ஒன்றுபட்டுத் தமக்குத் தாமே சான்றாக அமைந்தவர்.

சான்றோர் என்பவர் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்தனையும் உறுதியாகக் கொண்டவர் என்பார் வள்ளுவர். அது,

**"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மைஎன்று
ஐந்துசால் பூன்றிய தூண்"**

என்பது.

அன்பு உயிர்நிலையாம் பண்பு; அதுவே அருளின் தாய்;

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"**

என்றும் பிறர்க்கென வாழும் பெருந்தகைமையாளர்.

நாண் என்பது நாணம். தாம் அறிந்தோ அறியாமலோ தவறு செய்துவிட்டால் தம் செயலுக்குத் தாமே நாணிக் குனியும் தன்மையர். பிறர் சுட்டிக் காட்டும் நிலையில் குற்றம் எதுவும் வரக் கூடாது என்னும் தெளிவும் திண்மையும் உடையவர்.

எல்லாரும் - எல்லா உயிர்களும் - இனிது வாழ வேண்டும் என்னும் பேருள்ளம் ஒப்புரவு ஆகும். 'ஒத்ததறிவான் உயிர்வாழ்வான்' என்பது வள்ளுவம்.

கண்ணோட்டமாவது பிறர் மாட்டுக் கொள்ளும் ஈவு இரக்கம் உதவி ஆற்றுதல் தேற்றுதல் எல்லாமும் அமைந்த பெருந்தகைமை. "கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்" எனப்படுவது.

வாய்மையாவது எவ்வகையாலும் எவர்க்கும் தீமை தாராத சொற்களைச் சொல்வதாம். பிறர்க்கு நன்மை ஒன்று வருமாயின் தமக்குத் தீமைவரினும் தாங்கிப் பொய்மை கூறலும் பொருந்தும் எனக் கொள்பவர்.

இத்தகைய குணங்களைச் சார்ந்தால் எல்லா நற்குணங்களும் நிறைந்தவராகவே ஆவர்.

சான்றாண்மை என்பதோர் அதிகாரம் உண்டு. சட்டத்தால் திருந்த வேண்டிய நிலை இல்லாமல் தாமே அறத்தின் சட்டமாக வாழ்ந்து பிறரும் அவ்வகையில் வழிகாட்ட உதவுபவர் சான்றோர். ஆதலால், மாறா இயற்கையே மாற்ற முற்றாலும் நல்லவற்றில் இருந்து சான்றோர் மாறார் என்றும், சான்றோர்களின் சான்றாண்மை குன்றினால் இந்த உலகமே தன் சுமையைத் தான் தாங்க மாட்டாமல் அழிந்துபடும் என்றும் சான்றாண்மையில் வள்ளுவர் கூறுவார்.

இத்தகைய பெருமைகள் அமைந்த சான்றோரும், தாம் ஒருவராக இருத்தல் ஒருபொழுது இல்லை என்றாலும், மற்றொரு பொழுதில் சால்பு நிலை மாற நேர்ந்தாலும் நேர்ந்து விடலாம். அவ்வாறு அவர் நாளெல்லாம் பெற்றிருந்த நற்சான்றுகளெல்லாம் பெரும்பழியாகத் திரண்டு தலை நிமிர முடியாமல் செய்து விடும். மனம், மாடு என்றும், குதிரை என்றும் கூறுவர். சண்டிமாடு போலவும் அயல்நிலம் புகுந்து அழிவு செய்யும் மாடு போலவும், கட்டுக்கு அடங்காமல் தாவும் குதிரை போலவும் மனம் ஆகிவிடும் நிலைமை உண்டாதல் உண்டு.

தனித்திருக்கும் போது மனம் தன்னிலை கட்டு மீறலும் காணக்கூடியது. கட்டுமீறல் எளிது; மீறிய விளைவை மாற்றியமைக்கத் தலைகீழ் நின்றாலும் பயன்படாது. பட்ட கறை மாறாக் கறையாகவே பறை யறையப்பட்டுக் கொண்டே இருக்கும்.

அதனால் மனம் தூய்மை இருந்தாலும் இனம் தூய்மையும் இன்றியமையாதது என்பார் வள்ளுவர். மனந்தூய்மை உடையாரும் இனந்தூய்மை உடையாரையும் வினைத் தூய்மை

யுடையாரையும் சார்ந்திருத்தலே மாறா மாண்நலமாம் என்பதை,

**“மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்**
**இனம்தூய்மை தூவா வரும்”**

என்பார்.

சான்றோர் சேர்க்கை ஒருவர்க்கு ஒருவர் அரண்போல ஆகும். ஒருவர் சறுக்கவோ வழுக்கவோ நேரும் நிலை உண்டாயின் அதனை உடனே விலக்கவல்ல அறிவும்திறமும் துணிவும் இடித்துக் கூறும் உரிமையும் உடையவர் இருந்தால் எளிதில் எவரும் கெட்டுப் போகமாட்டார்.

தாம் ஒருவராக மட்டுமே இருப்பார் எத்தகு சான்றோர் எனினும் சூழலும் வாய்ப்பும் மன அசைவை உண்டாக்கக்கூடும். தடமாறிச் செல்ல இடமாக அமைந்து விடவும் கூடும்.

அதனால் அந்நிலை ஏற்பட வாய்ப்பு இல்லாமலே இருக்குமானால் கேடுவராது.

மரத்தைச் சார்ந்து நிற்கும் கொடி - அதனைப் பற்றிப் படர்ந்த கொடி - உச்சி வரை சுற்றிக் கிடந்தாலும் எவ்வளவு வலிய காற்றுக்கும் ஈடுதந்து மரத்தின் சார்பால் பற்றிக் கொண்டிருக்கும் பற்றுவேரால் அசைவின்றி இருக்கும். கேட்டில் படாமல் கிளர்ந்து சிறக்கும். தனித்து நிற்கும் கொடி கடுங்காற்றால் வேரோடு பற்றிப் பறித்து எறியவும் ஆகிவிடும்.

கால் தளர்ந்த போது, கால் உதவுவது போல் உதவுவது எது? ஊன்று கோல் இல்லையா?

அதனையே,

**“இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்க முடையார்வாய்ச் சொல்”**

என்றார் வள்ளுவர். கோலே - தடியே - தாங்கிப் பிடித்து வீழாமல் இருக்கும் என்றால், சான்றோர் துணை எவ்வளவு உதவியாம்.

ஔவையாரோ விழிப்பொடு கூறினார். சான்றோரும் ஒருவருக்கு ஒருவர் அல்லர் என்பாராய் 'இனம்' என்றார்.

இனமாவது கூட்டம். பல சான்றோர் இடையே இருக்கும் ஒரு சான்றோர்க்கு அசைவு ஏற்படும் நிலையில் ஒருவர் இல்லையானாலும் மற்றொருவர் வேறொருவர் எனத் தடுத்து நிலைப்படுத்துவார் அல்லரோ?

இடித்து அறிவுரை கூறத் தக்காரை இல்லாத எத்தலைவனும் நிலைதடுமாற முடியும். ஆதலால்,

**"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்கும் தகைமை யவர்"**

என்பார் வள்ளுவர். அவரே பெரியாரைத் துணைக் கோடல் என்றும், சிற்றினம் சேராமை என்றும் இருவகையாகச் சேரத் தக்கார் சேரக் கூடார் என்று பிரித்துக் காட்டினார். கெடும் சூழல் - கெடுக்கும் சூழல் - அமைந்த உலகில் கெடாதிருக்க வலிய துணை கட்டாயம் வேண்டும். இல்லையேல் கேடு, பழி ஆயவற்றில் இருந்து தப்புதல் அரிது என்று எச்சரிக்கவே 'சான்றோர் இனத்திரு' என்றார். "பெரியாரைத் துணைக்கொள்" என்றும் "சேரிடம் அறிந்து சேர்" என்றும் கூறினார்.

❖❖❖

## 13. சோம்பித் திரியேல்

"சோம்பலான பிள்ளையே
சுறு சுறுப்பே இல்லையே
சிற்றெறும்பைப் பாராய்"

என்பது குழந்தைகளுக்கு முன்னர்க் கற்பித்த பாட்டு.

**"சோம்பல் மிகக் கெடுதி பாப்பா"**

என்பது பாரதியார் பாப்பாப் பாட்டு.

இதன் விரிவு,

**"சோம்பர் என்பார் தேம்பித் திரிவார்"**

என்னும் கொன்றை வேந்தன்.

எறும்பு, தேனீ, கறையான் முதலிய உயிரிகள் சோம்பிக் கிடவாதவை.

'சோம்பி இரேல்' 'சோம்பிக் கிடேல்', 'சோம்பிப் படேல்' என்னாமல் 'சோம்பித் திரியேல்' என்றார்.

சோம்பன், தான் உண்டு உறங்கியே கிடப்பான் அல்லன்! வீட்டுள் அடங்கி இருப்பான் அல்லன்! உழைப்பான் அல்லன். உழையாமல் வீட்டுள் இருந்து வீட்டைக் காக்கவும் ஆகாமல் வேலை கெட்டு ஊரைச் சுற்றித் திரிவான்! குனிந்து நிமிர்ந்து வேலை செய்யான் என்பது குறிப்பாம்.

சோம்பேறியால் உணவு உடைக்கேடு; குடும்பத்திற்குப் பாரம்; வீட்டினர் வேலைக்குச் சென்றால் வீட்டுக் காவலாகவாவது இருப்பானா! ஊர் சுற்றப் போய்விடுவான். அதில் சோம்பல் கொள்ளான்.

புதிய திரைப்படம் வந்தால் முதலாளாக நின்று சீட்டு எடுப்பான், படம் பார்க்க!

வேடிக்கை விளையாட்டு அரட்டை என்றால் விடாமல் செல்வான். உழைக்கமாட்டான். உழைப்பாரையும் கெடுப்பான்!

**"ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
**போஒம் அளவுமோர் நோய்"**

என்பது போன்றவன் ஆவான்.

சோம்பன் தனக்காவது கேடு இல்லாமல் இருப்பானா? பயன்படுத்தாப் பொருள் எதுவும் கெட்டுப்போகும். பயன்படுத்தா வாழ்வும் உடல் உறுப்புகளும் செயலற்றுப்போம்.

சோம்பலில் இன்பம் காண்பது நாய்; ஒரு சுற்றுச் சுற்றும்; ஓய்ந்து படுக்கும். கிடையாகக் கிடக்கும். சுற்றிய பயன் என்ன? சோம்பிக் கிடக்க வைத்ததே. வீட்டுக் காவலை விட்டது! சுற்றியது! படுத்தது! இப்பிறவியும் அதனையே செய்கிறது.

"வாழைப் பழம் சூறை போடுகிறார்கள்" என்றான் ஒருவன்
"உரித்துப் போடுகிறார்களா? உரியாமல் போடுகிறார்களா?" என்று கேட்டானாம் சோம்பேறி.
உரித்துப் போட்டால் தோலை உரிக்கும் வேலையும்
இல்லை அல்லவா!
மடத்தில் படுத்துக் கிடந்தான் ஒரு சோம்பேறி.
மடத்தின் ஒருபக்கத்தில் தீப் பிடித்து எரிந்தது
சோம்பன் தீப்பிடித்தது கண்டும், எழும்பவில்லை!
"தீப்பிடித்த தென்று உடன் படுத்துக் கிடந்தவரை
எழுப்பவும் இல்லை"

**"அதையும் தான் சொல்வானேன்**
**வாயும் தான் நோவானேன்"**

என்றானாம்! இவை மக்கள் வழங்குவன.

சோம்பலுக்குப் பழம் பெயர் 'மடி' என்பது. மடிதல் என்பது மடித்துப் போதல். அதாவது, மட்கி மண்ணாகிப் போதல் என்பது ஒரு பொருள்.

மடிதல் என்பதன் மற்றொரு பொருள் இறத்தல் என்பது சோம்பலும் சாக்காடும் ஒப்பானவையே!

சோம்பல் உயிரோடே திரிந்து வீட்டையும் ஊரையும் கெடுக்கும். ஆனால், மடிந்து விட்டால் அக்கேடுகள் ஏற்படா!

சோம்பன் இருப்பதினும் இறப்பதே உலகுக்கு நலமாம் என்பது இதன் விளக்கமாம்.

சோம்பன் எழுப்பினால் எழும்பான்.
பல்விளக்கு என்றால் மாட்டான்
குளி என்றால் மாட்டான்.
உண்பதிலே குறைவைக்க மாட்டான்
உடுப்பதிலே எவருக்கும் மேலாக இருப்பான்.
கண்ணாடி முன்னே நின்று மணிக்கணக்கில் தன்னை
ஒப்பனை செய்வான்! ஊர் சுற்றப்போவான்.
ஊரில் இவனைப் போன்றோரிடம் அரட்டை அடிப்பான்.

மீண்டு வருவான்; வயிற்றில் குறையாமல் அடைப்பான்

படுப்பான்; குறட்டைவிடுவான்! எவர் சொல்லையும் கேளான். கேட்டாலும் எதுவும் செய்யான். சோம்பன் சோம்பல், குடியைக் கெடுக்கும் என்பார் திருவள்ளுவர்

ஊக்கமுடைமையை அறுபதாம் அதிகாரமாக வைத்த திருவள்ளுவர், சோம்பல் இல்லாமையாம் மடியின்மையை அடுத்தும், அதனை அடுத்து ஆள்வினை யுடைமையையும் வைத்தார்.

ஊக்கமுடையவர் தம்மைக் கண்டேனும், ஆள்வினை உடையவரைக் கண்டேனும் இந்த மடியன் (சோம்பன்) மடியை விட்டொழிக்க மாட்டானா என எண்ண வைக்கிறார்!

ஊக்கம் என்பது உடலில் இல்லை; கருவியில் இல்லை. உள்ளத்தின் உறுதியில் உள்ளது என்பதால் "உள்ளம் உடைமை உடைமை" என்றார்.

"ஊக்கத்தை உடையவர் ஆக்கத்தை இழக்கமாட்டார்"
"ஆக்கமே, ஊக்கமுடையவரை வழிகேட்டுத் தேடிவரும்"
"உள்ளம் போலவே உயர்வும் உண்டாம்"

என்றெல்லாம் கூறினார்.

"உதவி செய்தல் என்பது ஆள்வினை (முயற்சி) உடையவனுக்கே கூடும்"

"முயற்சியாளன் இயற்கைத் தடை செயற்கைத்தடைகளை எல்லாம் வெற்றி கொள்வான்"

"அவனுக்கு உடற்குறை என்பதொன்று உண்டாயினும் அக்குறையையும் வென்று வீறுபெறுவான்"

"முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை என நிமிர்ந்து நிற்பான் என்று" ஆள்வினையுடைமையில் கூறினார்.

இவ்விரண்டன் இடையே வைக்கப்பட்ட மடியின்மை சோம்பல் இல்லாமை என்றும் பொருளதாம்.

ஊக்கமுடையவன் சோம்பேறியாகான்; அவ்வாறே,

ஆள்வினையுடையவனும் சோம்பலைச் சுட்டெரிப்பான்! என்று தெளியவே வைத்தார் திருவள்ளுவர்.

"சோம்பித் திரியேல்" என்பதன் பெருவிளக்கம் இம்மூன்றதிகாரங்கள் எனலாம். இம்மூன்றையும் உணர்ந்து கடைப்பிடித்தவன் சோம்பித் திரியான் என்பது முடிபாம்.

"தின்னுமாம் ஒரு படப்பு (வைக்கோல் போர்); திரும்பாதாம் ஒரு மடக்கு" (உழவில் ஒரு சுற்றும் வராது)

என்பது ஒரு பழமொழி.

**"முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்**
**பின்னே இருந்திரண்டு பேர்தள்ள - எந்நேரம்**
**வேதமோம் வாயான் விகடரா மன் குதிரை**
**மாதம்போம் காத வழி"**

என்பது **காளமேகம்** தனிப்பாடல்.

❖❖❖

# 14. தூக்கி வினை செய்

காலைத் தூக்காமல் நடையிட முடியாது. கையைத் தூக்காமல் எவ்வேலையும் செய்ய முடியாது. தலையைத் தூக்காமல் நிமிர்ந்தெழ முடியாது.

பழ நாளில் தூக்கி நிறுத்ததால்தான் தூக்கு என நிறுத்தல் பெயர் பெற்றது. தூக்குத் தூக்கி என்பவன் ஏட்டுக் கட்டைத் தூக்கிச் செல்பவன். தூக்கு என்பது சொல் சொல்லாக அசை அசையாக தூக்கி எடுத்து ஆராய்தலால் செய்யுளுக்குத் தூக்கு என்னும் பெயர் ஒன்று உண்டாயது. உட்கார்ந்து கொண்டு உறங்குவது தூக்கம்; தூக்கிக்கொண்டு தெரியாமல் போதல் திருட்டு. தூக்கிட்டுக் கொள்ளுதல் தற்கொலை! தூக்கிய திருவடி என்பது குஞ்சித பாதம்! தூக்கில் போடுதல் தண்டனை!

குழந்தைகளைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு ஆடுதல் வழியாக ஏற்பட்டது கொண்டாட்டம். இவற்றுள் செய்யுளுக்குச் சொல்லப்பட்ட ஆராய்தல் பொருளதே இத் 'தூக்கி வினை' செய் என்பதில் உள்ளதாம்.

நட்பை எப்படி ஆராய்ந்து கொள்ள வேண்டுமோ அப்படியே, தொழில் ஒன்றைச் செய்வதில் ஈடுபடுவதற்கு முன்பே அதனை நன்றாக ஆராய்ந்தே செய்யத் தொடங்குதல் வேண்டும். அதற்காகவே இடமறிதல், காலமறிதல், வலியறிதல் என்றும்; வினை செயல்வகை, வினைத் திட்பம், வினைத்தூய்மை என்றும், ஊக்கமுடைமை, குடி செயல்வகை, தெரிந்து செயல்வகை, தெரிந்து வினையாடல், பொருள் செயல் வகை, உழவு என்றும் ஊழ் என்றும் பலவகை அதிகாரங்களைப் படைத்தார் திருவள்ளுவர்.

உழைப்பால் தான் உலகம் வாழ்கிறது; உழைப்பும், உழைக்கும் வகையால் - உழைக்கும் முறையால் - உழைக்கும்

திறத்தால் செய்யப்பட வேண்டும் என்பவற்றைப் பன்முறை யானும் வலியுறுத்த வேண்டும் என்றே இவ்வாறு உரைத்தாராம்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று கூறுமளவில் நின்றார் அல்லர். உழைப்பைத் தொடங்க வேண்டும் முறை, செயலாற்ற வேண்டும் முறை, செயல்தடை ஆகும் வகை, அதனைத் தீர்த்துச் செவ்வையாக அரைகுறை -யின்றி முற்றுவிக்கும் வழி என்பனவற்றை எல்லாம் பலபட விரித்துக் கூறினார் வள்ளுவர். தொழில் அல்லது **வினை** குறித்து விரித்துக் கூறியது போல் எந்த ஒன்றையும் திருவள்ளுவர் விரித்துக் கூறினார் அல்லர். அடுத்து விரித்துக் கூறியது **நட்பே**யாம்.

இவ்விரண்டுமே வாழ்வின் உயர்வு தாழ்வுகளுக்கு ஊற்றுக்கண் அன்னவை என்பதை உணர்ந்தே இவ்வளவு விரிக்கிறார்.

ஆராய்ந்து வினை செய்யாக்கால் வினையை முற்ற முடியச் செய்து வெற்றி பெறுதல் அரிதாகும்.

ஒரு செயலைத் தொடங்கும் முயற்சியே சிறப்பாக அமையின் அதுவே அரை வெற்றி என்பர்.

ஆனால், அதற்கு முன் வேண்டிய வகையாலெல்லாம் எண்ணித் தொடங்க வேண்டும்.

தொடங்கற்க எவ்வினையும்? என்று கூறும் திருவள்ளுவர் எண்ணம், வினையைத் தொடங்காதே எனத் தடுப்பது அன்று. "தொடங்கத் தக்க இடம் காலம் சூழல் ஆயவை வாய்ப்பாக அமையும் வரை காத்திரு; வாய்த்து விட்டால் உடனே காலத் தாழ்வு இல்லாமல் தொடங்கி விடு" என்பதற்கே,

"தொடங்கற்க எவ்வினையும்... இடங்கண்ட பின் அல்லது" என்றார்.

கொக்கு மீனைப்பற்ற அது வரும் வரை எப்படிக் காத்திருக்கிறது. அப்படித் தக்க இடமும் பொழுதும் வரும்வரை காத்திரு. வாய்ப்பு வந்து விட்டால் கொக்கு மீனைக் குத்தி எடுப்பது போல் உடனே செய்து முடித்துவிடு என்பார்.

**"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து"**

என்பது அது.

செய்வானை ஆய்க! செயலை ஆய்க! காலத்தொடு பொருந்த ஆய்க! இச் செயலை இவன் முடிப்பான் என்பது எண்ணிச் செய்க. வினைசெய்யும் திறம் பலர்க்கும் பலவகையாக அமையும். ஒருவருக்கு இல்லாத பயிற்சி ஒருவருக்கு இருக்கும். ஒருவருக்கு இல்லாத நுண்ணோக்கு ஒருவருக்கு இயல்பாக இருக்கும். முன்னவன் முந்தியவனாய்ப் பின்னவன் பிந்தியவனாய்ப் பணியில் சேர்ந்திருக்கலாம். அதனால் பின்னவன் என்னாமல் முன்னவன் கூர்ப்பு மிக்க பின்னவன் கருத்தையும் செயன்மை நுணுக்கத்தையும் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கவோ தவிர்க்கவோ தவறவோ கூடா. செயலைச் செவ்வையாக முடிப்பதே நோக்கமாகக் கொண்டால் செய்ந்நேர்த்தி யுடையானைப் பயன்படுத்தி, அவனை ஊக்கி அத்திறத்தைத் தானும் பிறரும் அடைய வகை கண்டால் தொழிலகமே மேம்படும்.

போலிமானம் பார்த்து அவனை என்ன கேட்பது என்று எண்ணினால், தொழிலைக் கெடுத்தவன் அவனே ஆவான். தக்கான் இவனென ஒருவனைத் தேர்ந்தெடுத்த பின்னர், அவன் செயற்பாட்டில் தலையிடுதல் ஆகாது. தலையிடின் அவனுக்கு நம்மை நம்பாமல் இடை இடைத் தலையிடுகிறான் என்ற எண்ணம் உண்டாகி ஊக்கம் இழந்துவிடுவான். இவனிடம் பொறுப்பை விடலாமா விடக்கூடாதா என்பதை முன்னரே எண்ண வேண்டுமே அன்றிச் செயலைச் செய்ய விட்டபின் எண்ணல் கேடாக்கும். ஒரு செயலின் வெற்றி என்பது செயலில் இல்லை. செய்வானின் மன உறுதியிலேயே உள்ளது. மன உறுதி

இல்லாச் செயல் திறமையால் மட்டும் முடிந்து விடாது. திறமையும் வேண்டும். அதற்குமேல் மன உறுதியும் வேண்டும்.

மனத்திட்பமே செயல்வெற்றிக்கு மூலம் என்பதை,

"வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்"

என்பார்.

மற்றவர் பலநாள் முயன்று பலவகையாகச் செலவிட்டுப் பல பாடுபட்டுச் செய்யும் செயலைத் தேர்ச்சியுடையான் இயல்பாக எளிமையாக உடனே செய்து முடிப்பான். அப்படிப் பட்டவனைத் தேர்ந்தெடுத்து அவனிடம் ஒப்படைப்பதே பெரிய வெற்றி. அதனால்,

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"**

என்பார்.

பெரிய பெரிய கண்டுபிடிப்புகளை உலகுக்கு வழங்கியவர்களைப் பாருங்கள். அவர்கள் அத்தனை பேரும் பட்டம் பெற்றவர்கள் அல்லர். பள்ளிக் கூடத்துள்ளேயே கல்வி அடங்கி விடுவது இல்லை! கல்வி நிலையங்களுக்கு அப்பாலும் அறிவும் ஆற்றலும் திறமும் கொட்டிக் கிடக்கின்றன.

படிப்பாளிகள் எல்லாரும் படைப்பாளிகள் அல்லர்;

படைப்பாளிகள் எல்லாரும் படிப்பாளிகள் அல்லர்;

இரண்டும் சேர்ந்தமைந்தார் மிகமிகச் சிலரேயாம்.

ஒருவர் கணக்கில் - மனக் கணக்கில் புலி! நான்கு எண் கொண்ட ஓர் எண்ணை இன்னோர் நான்கு எண் கொண்ட எண்ணால் பெருக்கி, அதனை மற்றுமோர் நான்கு எண் கொண்ட எண்ணால் பெருக்கிச் சொல்க என்றால், சில நொடிப் பொழுதுகளுள் சொல்லி விடுவார். கணிப்பானைப் பயன்படுத்திச் சொல்லக் கூடப் பொழுதாகும். அதன் முன் அவர் சொல்லிவிடுவார்! அவர் மூளையே எண்கணிப்பானாகச்

செயல் பட்டதை யான் அறிவேன். அவர் பெயர் கோவிந்தராசன். அவர் திறம் கண்டு.

**"கோவிந்த ராசனார் கொண்ட கணக்கறிவால்**
**மாவிந்தை செய்தார் மதி"**

எனப் பாராட்டினேன்.

இது, எனக்கு எளிது! அது அவர்க்கு எளிது. 'எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது' என்பது ஔவையார் மொழி.

பெற்றோர், ஆசிரியர், தொழில் முனைவர், ஆட்சியர் தலைமையர் என இருப்பார் எவர்க்கும் அரிய பெரிய ஆக்கம் செய்வது ஒருவர்க்குரிய, ஆர்வம், திறம், இயல்பு என்பவற்றைக் கண்டு பிடித்து அவர் திறத்துக்குத் தக்க கல்வி, தொழில், தொண்டு, பொறுப்பு முதலியவற்றை ஒப்படைத்தல். தூக்கி வினை செய்து துலங்குவதில் எல்லாம் துலக்க மிக்கதாகி விடும்.

**தூக்கி வினை செய்வாரே துலக்க மிக்காராம்!**

❖❖❖

## 15. பீடு பெற நில்

வாழும் வீட்டிலேயே வீடு பேறு பெற அறியான், விண்ணுலக வீடு பேறா அடைவான்! வீட்டிலே யிருந்தே பீடுபெற நிற்கத் தொடங்க வேண்டும் என்பதன் அடிமூலம் அறியாதவன், ஊரில், நாட்டில், உலகில் பீடுபெற நிற்பானா?

பீடு = பெருமை பீடம் = உயரம். உயர்வும் பெருமையும் ஒருங்கே வரத் தலைநிமிர்ந்து நின்று, தன் பெருமிதத்தை மாற்றானும் அறிய வைப்பதே பீடுபெற நிற்றலாம்.

புகழ்புரிந்த - புகழ் வாழ்வு வாழ்கின்ற - குடும்பத்தவனே, தன்னை எதிரிடும் பகைவர் எதிரிலும் பீடு பெற நிற்பான்; பீடு நடையிடும் ஏறு போலத், திமில் பொலிவும் நடை எழுச்சியும் பார்வைக் கிளர்ச்சியும் வெளிப்பட நடப்பான் என்பதைப்,

**"புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை"**

என்றார் வள்ளுவர்.

ஏறு = காளை, யானை, அரிமா, போர்வல்லான் எனப் பல பொருள் தரும் ஒரு சொல் அது.

ஒரு நிலம், பீடு பெற வேண்டுமானால், அங்குத் தக்க சான்றோர் பிறக்க வேண்டும்.

இந்திய நாட்டில் எத்தனை எத்தனை கோடாயிரம் கோடிப்பேர்கள் பிறந்துளர்? எனினும் இந்திய நாடு காந்திநாடு என்று அழைக்கப்படுகிறது அல்லவா!

**"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

என்று தமிழ்நாடு வள்ளுவரால் உலகப் புகழுக்கு இடமாகி விட வில்லையா? ஆதலால், மண்ணின் மதிப்பு விளைவாலும்,

மண்ணுள் உள்ள பொருளாலும், இருக்கும் இடத்தாலும் பெயர் பெற்றாலும் பொருள் பெற்றாலும், சான்றோர் பிறந்தமை போலப் புகழ் பெற இயலுமா? அந்த மண்ணும் தக்கார் இருந்து பயன் கொள்ளும் சிறப்பைப் பொறுத்துப் பெருமை பெறவில்லையா!

கோலார்ப் பகுதியில் கொழுத் தேய உழுது கொண்ட பயன் என்ன? உள்ளே தங்கப்பாளங்கள் இருப்பதைக் கண்டு தக்கார் முயன்று எடுத்தமையால் தங்கவயல் எனப் பெயர் பெற்று விடவில்லையா?

**"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று"**

என்று வள்ளுவர் கூறுவ தென்ன?

பிறக்கும் போதே புகழோடு பிறக்கப் பிறந்தவன் என்ன செய்ய முடியும்? ஆதலால், தோன்றல் என்பது பிறத்தல் பற்றியது அன்று, பிறக்கும் போதே தாம் புகழோடு பிறக்க வேண்டும் என்று எப்படி எண்ணமுடியும்? ஆனால், ஒருவர் தாம் எடுத்துக் கொண்ட தொழிலில், ஆய்வுத் துறையில், படைப்பாக்கத்தில் புகழோடு தோன்ற வேண்டும். தோன்றியே ஆவேன்! புகழோடு விளங்குதல் என் அறிவு, ஆற்றல், உழைப்பு ஆகியவற்றில் உள்ளது என்று திண்ணமாக எண்ணி, எண்ணியபடி முயன்றால் அப்புகழை அடைந்தே தீர முடியும்.

**"முயற்சி திருவினை ஆக்கும்"**

**"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்"**

என்னும் வள்ளுவங்கள் கூறுவது அதுவே.

இப்பிறவி மட்டும் உறுதியானது; நாம் வெளிப்பட அறிவது. முன்னே நமக்கு எப்பிறவி இருந்தது? பின்னே எப்பிறவி வாய்க்கும்? தெரியா.

தெரியும் என்றால் உண்மை போலச் சொல்லும் பொய்யே! அதனாலேயே, கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர் எனத் தப்பித்துக் கொள்கின்றனர்.

பிறந்து விட்ட இப்பிறப்பிலேயே ஏழு பிறப்பு உண்டு என்றார் வள்ளலார். பிள்ளை, குழந்தை, குமரன், காளை, வாலியன், முதியன், பெருமுதியன் என்பவை ஆண்பால் என்றும் பிள்ளை, குழந்தை, குமரி, கன்னி, மங்கை, முதியள், பெருமுதியள் என்பவை பெண் பால் என்றும் கொள்ளலாம்!

ஒரு தவறு செய்து விட்டவன் அத்தவற்றை உணர்ந்து திருந்தி விட்டால் புதிய பிறப்புப் பிறந்து விட்டான் என்பதைத் திரு.வி.க. **"சித்தம் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்"** என்றார்.

ஆதலால், இப்பிறவியில் பீடு பெற நிற்றலை நிலைநாட்டல் அன்றி எப்பிறவிக்கோ இழுத்துச் செல்லல் செயலாற்றல் இல்லார் செயலாகும்.

பீடுபெற்று நிற்க என்ன செய்ய வேண்டும்!

'பீடு' என்பது பெருமிதம்.

பெருமிதம் எவ்வழியால் எல்லாம் அடையலாம் என்பதை ஆசிரியர் தொல்காப்பியர்,

**"கல்வி தறுகண் இசைமை கொடைஎனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"**

என்றார்.

கல்வியால் பெருமிதமானவர் - பெருமித நிலையில் நின்றவர் - எண்ணற்றவர் அவர்களை எண்ணி முடியுமா?

**"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு"**

என்றும்,

**"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்**
**வள்ளுவர் போல் இளங்கோ வைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"**

என்ன வில்லையா?

"வெண்பாவில் புகழேந்தி, பரணிக்கோ செயங்கொண்டான்"

இப்படி அடுக்க வில்லையா?"

தறுகண் என்பது பேராற்றல்.

ஒருவீரன் சொல்கிறான்! தடாதீர்கள்! தடாதீர்கள்!
யான் அவனை அன்றித் தாக்கேன் எவரையும்?
அவனும் என்னை யன்றித் தாக்கான் எவரையும்?
ஒன்று அவன் என்னிடம் இறந்துபடுவான்!
அல்லது நான் அவனிடம் இறந்து படுவேன்!
இல்லையேல் இருவருமே இறந்து படுவோம்!
நாளை அவன் தாய் அவனுக்காக நீராடுவாள்!
இல்லை எனக்காக என் தாய் நீராடுவாள்!
இல்லையானால் இருவர் தாயும் ஒருங்கே நீராடுவர்!

இத் **தகடூர்யாத்திரைப்** பாடல் தறுகண் இணையற்றது! ஈழப் போராடிகள் ஒவ்வொருவரும் இத்தகடூர் யாத்திரையை மெய்யாக்கிய தறுகண்ணர்!

இசைமையாவது புகழ்!

**"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்**
**பொன்றாது நிற்பதொன் றில்"**

என்பதற்கு இலக்கணமானவர்களாகிய இறவா வாழ்வர். கொடைச் சான்றாகத் திகழ்பவர் வள்ளல் எழுவர், குமணன், சடையர், இரகுநாத சேதுபதி, சீதக்காதி, அழகப்பர் அண்ணாமலையார், பச்சையப்பர் என எண்ணுவார் எண்ணத்திற்குத் தக விரிவானவர்.

இந்நான்கையும் அன்றி ஒரு பெருமிதம் உள்ளமை வள்ளுவர் வழங்கும் வாயுரை.

**"வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே**
**வாழுநம் என்னும் செருக்கு"**

என்னும் இல்வாழ்வாம் நல்வாழ்வுப் பெருமிதம்

பீடு பெற நிற்றல் பிறவி நோக்காயின்,

'வீடும் வேண்டா விறலின் தொண்டரா'கத் திகழ்வார்!

அவர் தொண்டு புரியவே பிறந்த பெருமையர்

தொண்டு தொண்டுக்கே என்று கண்டு கொண்ட அவர் பிறவற்றைக் கண்கொண்டு பாரார்!

"புகழும் வேண்டாப் புகழாளர்" அவர்!

"வேண்டாமையையே விழுச் செல்வமாகக் கொண்டவர்" அவர்

அலர்ந்த பூவும், பழுத்த இலையும் உதிர்வது போல

இயற்கை இறைமையில் ஒடுங்குபவர்!

அவர் விரும்பாமலும்,

உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய அவர்,

உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உறைவாராகத் திகழ்பவர்!

பீடு பெற நிற்றல், வீடு பெற நிற்றலாம்!

❖❖❖

## 16. மாற்றானுக்கு இடம் கொடேல்

மாற்றான் - பகைவன்; நம்மை அழிக்குமாறு செய்யும் மனம் கொண்டவன்; நாம் வாழப் பெறாதவன்; அவன் எப்பொழுதும் நம்மை அழிக்கும் சூழல் ஏற்படுவதை நோக்கிக் கொண்டே இருப்பான். ஆதலால், அவனை நம்பாமலும் நெருங்கவிடாமலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அழிக்கத் தக்க காலத்தையும் இடத்தையும் சூழ்நிலையையும் பார்த்துக் கொண்டே இருப்பவன். ஆதலால், அவனுக்கு இடம்தந்து நமக்கு நாமே அழிவைத்தேடிக் கொள்ளக்கூடாது என்னும் தற்காப்பு ஆணையாகத் தமிழ் இனத்துக்கு உரைத்த உரையாக, அவர் சொல்லிய நாளில் இருந்து மேற்கொண்டிருந்தாலும் கூட, நமக்கு வந்திருக்கும் கேடுகள் பலவற்றை வாராமல் தடுத்திருக்க முடியும். இன்று வரை மாற்றானுக்கு இடந்தந்து கெட்டோம். **நாமே மாற்றானை மண்டியிட்டு அழைத்துக் கெட்டோம். மாற்றானை மதித்தும் கெட்டோம்.**

**நம்மை அழித்துத், தான் வாழ வேண்டும் தன் இனம் வாழ வேண்டும் என்று எந்நாளும் திட்டமிட்டு அழித்துக் கொண்டே இருப்பவனுக்கும் இடம் தந்து கெட்டோம்.**

**இவன் மாற்றான் - கெடுப்பதே நோக்கமாக இருப்பவன் என்று கண்டு தெளிவாக உரைத்தவனையும் பகையாகக் கொண்டு மாற்றானாம் பகைவனுக்குத் துணை போகிக் கூண்டோடு கெட்டுப் பூண்டோடு அழியவும் வழிவகுத்துக் கொண்டுள்ளோம்.**

மாற்றான் தன் எண்ணத்தை மாற்றான்; எவ்வகையாலும் எந்நிலையிலும் மாற்றான். மாற்றான், நம்முள் விழிப்பு எவனாவது அடைவான் என்றால் நம்மவனையே நமக்குப் பகையாக்கி நமக்குள் மோதி அழிய விட்டு, ஒன்றும் அறியாத

நல்லவன் போல நற்பெயரும் எடுத்துக் கொள்வான். சிந்திக்க மாட்டாதவர்களைத் தன்வயப்படுத்திக் கொண்டு தன் சூழ்ச்சிக்கு வாய்த்த துணையாகக் கொள்ளவும் செய்வான். நம்முள் இருவர்க்கு மாறுபாடு ஏற்பட்டால் ஒருவனைத் தூண்டி விட்டு அழித்து, வெற்றி பெறச் செய்து அவனைத் தன் அடிமையாக ஆக்கிக் கொள்வான். அவன் சற்றே தெளிவு பெற்றுத் தன்னை ஏமாற்றிப் பகையாக்கி விட்டான் என்று ஐயப்பட்டால், அவனை அழித்துக் கட்டுவான். **மற்றானுக்கு இடந்தந்தே மண்ணாய்ப் போன இனம் உலகில் ஒன்று உண்டு என்றால் அது தமிழினமே யாகும்.**

நமக்கு மாற்றானாக இருப்பவன், தன் இனத்துள் எதிரிட்டுக் கொள்வான்; முட்டி மோதிக் கொள்வான்; ஆனால், நம்மை அழிக்க வேண்டும் போதில் தனக்குள் இருந்த மாறுபாடு வேறுபாடு எல்லாவற்றையும் ஒதுக்கித்தள்ளி விட்டு நம்மை அழிப்பதற்கு ஒன்றுபட்டு நிற்பான். எத்தனை எத்தனை பிரிவு பிளவு; பகை வெறுப்பு தமக்குள் இருந்தாலும் நம்மை அழிப்பதில், கெடுப்பதில், சுரண்டுவதில், ஒன்றுபட்டு எள்ளத்தனைப் பிளவும் இல்லாமல் இருப்பான்.

நம்மவனுக்குள் பகை எதிர்ப்பு கருத்துமாறுபாடு இருந்தால், எந்நிலையிலும் மாற்றிக் கொள்ளமாட்டான். மாற்றான் அழிக்கும் போது அழிக்கட்டும் என நினைப்பான். அழிக்கத் துணையும் செய்வான்; நம் அழிவைக்கண்டு உள்மகிழ்ச்சியும் கொள்வான். ஒன்றுபட்டு நிற்க வேண்டிய சூழல் எத்தனை ஏற்பட்டாலும் ஒன்றுபடமாட்டான்! ஒன்றாக அழிந்து போக இருப்பவனுக்கு ஒன்றுபட எண்ணம் வருமா?

தனக்குள் உண்டாகிய பகைவேறு; தன் இனத்துக்கு, தன் மொழிக்கு - தன்நாட்டுக்கு வரும் பொதுப்பகைவேறு என்று பிரித்து எண்ணிப் பார்க்காத பேதைப்பிறவி தமிழ்ப்பிறவி. அதனால், மாற்றானுக்கு இடந்தந்து தன்னுரிமை அன்றி அயலான் கால் வைக்காத மண்ணைப் பறிகொடுத்தான்.

மாற்றானை அழைத்து வந்து தன் இனத்தைக் காட்டிக் கொடுத்த கயமையால் பாண்டிநாடு தெலுங்கர் ஆட்சிக்கும் முகமதியர் கொள்ளைக்கும் ஆட்பட்டு, ஆங்கிலேயர் முற்றாக அடிமைப் படுத்தும் வரை நின்றது! மாற்றார்களின் ஆட்சியால் தமிழ் மொழி சீரழிந்தது; தமிழன் எடுபிடியானான். சோழருள் ஏற்பட்ட பிளவால் மராட்டிய சாசி அழைக்கப்பட்டு தஞ்சைப்பகுதியைப் பற்றிக் கொண்டு ஆளத் தமிழனாட்சி ஒழிந்தது. சேர நாட்டு ஆட்சியோ மொழித் திரிபால் கேரளமாகிப் போனது. மூவேந்தர் நாடும் மாற்றானுக்கு இடம் தந்தே அழிந்தது.

ஆத்திசூடி பாடிய பிற்கால ஔவைக்கு முற்பட இருந்த சங்கக்கால ஔவை 'இன்றே போல என்றும் இருங்கள்' என்று இரண்டு வேந்தர் கூடியிருந்த போது வாழ்த்துதல் வகையால் வாழ்வியல் காட்டினார். இன்னொரு புலவர் மூவேந்தரும் ஒன்றாக இருந்து மகிழ்ந்த நிலைகண்டு "இன்றே போல என்றும் நீங்கள் ஒற்றுமையாக வாழுங்கள்" என்றார். என்ன சொல்லி என்ன? மூவேந்தையும் இணைத்து இளங்கோ காவியம் பாடினார்.

இந்நாளில், அறிவியல், பொருளியல் முதலாம் இயல்கள் வளர்ந்தது மட்டுமன்றி உலகமெல்லாம் தத்தம் மொழியையும் நாட்டையும் இனத்தையும் கண்ணாகக் காத்துக் கொண்டு மாற்றானுக்கு இடம் தராமல் இருப்பதைக் கண்ணாரக் கண்டும், கண் கெட்டாராய் இருக்கும் தமிழர் என்று தான் விழிக்கப் போகிறாரோ?

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

மணிமொழிதான்! அது நமக்கு மட்டும் தானா? மற்றை மற்றவர்களும் அதனைக் கொள்ளாமல் நம்மண்ணையும் நம்மொழியையும் நம் இனத்தையும் குறிக்கோளாகக் கொண்டு அழிக்கும் போது நாம் மட்டும் அதைக் கூறிக்கொண்டிருப்பது புலம்பல் அல்லாமல், 'புலமை' ஆகிவிடுமா?

இப்பொழுது வேண்டுவது எது? யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று நாம் கொண்டிருக்கும் கொள்கையன்று. அதற்கு அடுத்துவரும்,

**"தீதும் நன்றும் பிறர்தர வாரா"**

என்னும் தேர்ந்த வழிகாட்டல் உரையேயாம்.

நமக்கு நன்மை செய்வார் எவரும் இல்லை! நமக்குத் தீமை செய்வாரே எங்கும் உள்ளார். அந்நிலையில் எங்களுக்கு நன்மையும் தீமையும் சரி, பிறர் தரப் போவதில்லை, நாங்களே எங்கள் நலத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறே எங்களுக்கு வரும் தீமையை நாங்களே துணிந்து ஒன்றாய் நின்று தீர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றைச் செய்யத் தவறினோம் என்றால் எங்களுக்குக் கேடர் நாங்களே என்பது எழுதிவைத்த கல்வெட்டு ஆகிவிடும்.

தமிழினம் தன் குடும்பத்திலேயே தமிழ் பேசுவதையே விடுகிறதே! தமிழ் பேசத் தெரியாது என்பதில் பெருமை கொள்கிறதே! நான் படிக்காத குருடன் என்று முன்னைய தமிழன் நாணினான். இன்றைய தமிழன் "தமிழ் தெரியாது!" என்பதைப் பெருமையாகக் கொள்கிறான்.

வீட்டிலேயே பேசப்படாத மொழி நாட்டில் ஆளும் மொழியாக ஆணைமொழியாக இருக்குமா? தமிழைக் காப்பதற்காக இந்தியை எதிர்ப்புச் செய்தவர்கள், முற்றாக ஆங்கிலேயர்களாகி - ஆங்கிலேயர் நாளில் நடவாத அளவு ஆங்கில அடிமையராய் விட்டனர். ஆட்சி நலம் விடாப் பேராசையால் இந்திக்கும் அடிமையாகிவிட்டு இந்தி எதிர்ப்பென - இருமொழிக் கொள்கை என நாடகமாடுகின்றனர்.

மாற்றானுக்கு இடம் கொடுத்ததால் தமிழ் வழிபாட்டை இழந்தோம்; தமிழ்ச் சடங்குகளை இழந்தோம்; தமிழிசையைத் தமிழ்க் கூத்தை இழந்தோம். நம் பண்பாட்டை - நாகரிகத்தை - போக்கடித்துப் போலித்தனத்தின் பொய்க்கதையின் புகலிடமானோம்.

நம் முகவரியாம் பேரைத் தமிழில் வைப்பதை இழந்தோம். ஊர்ப்பெயர், தெய்வப் பெயர் எல்லாம் எல்லாம் இழந்தோம். சாதகம், சோதிடம், சுவர்க்கம், நரகம், தலைவிதி என்னும் புனைவில் குறட்டை விட்டுக் கொண்டுள்ளோம். தமிழ்ப்பிறவியரும் மாற்றான் செய்யும் கரவு வழியால் பொருள் பறிக்கத் தொடங்கிக் கொடிகட்டிப் பறக்கின்றனர். கையகல மண் தானும் நம் உரிமை இல்லை என்னும் இழிமைக்கு இடமானோம். ஔவையார் இவ்வளவும் எண்ணியா சொன்னார் என்று வாயைப் பிளப்பார் இருந்தால் இவ்வளவும் எண்ணும் வகையில் சொன்னாரா இல்லையா? சொந்த அறிவு சிந்தனைத்திறம் இருந்தால் காணும் உண்மையை விட்டுவிட்டு உறக்கக் கனவில் நடக்கமாட்டார்! விண்ணிலே காலடி வைத்துள்ள காலம் இது! வான ஊர்தி வலவன் என்பதைச் சொன்னவன் காலத்தில் வானவூர்தியைக் கண்டா சொன்னான்! நாம் அவன் சொன்னதை இன்று காண்கிறோமா இல்லையா?

இந்த மண்ணின் மைந்தராகப் பிறந்தாரா கால்டுவெல்! தமிழின் பெருமையை முதற்கண் உலகறியச் செய்தவர். நமக்கு வழிகாட்டியாக அமைந்தவர் - அவர்தாமே! வீரமாமுனிவர், போப்பையர், எல்லீசர், கிரீனார் முதலோர் வேற்றுமொழியராய் வேற்று நாட்டாராய் இருப்பினும் மாற்றார் அல்லர்! இம்மண்ணை - மொழியை - ஏற்றார் அவர்!

அப்படி இம்மண்ணைத் தம் மண்ணாய் - தமிழைத் தம் மொழியாய் தமிழினத்தைத் தம் இனமாய் - தமிழராய் வாழ்வார் மாற்றார் ஆகார்!

தமிழராகப் பிறந்தும் தமிழர்க்கு உட்பகையாக வாழ்வாரும், தமிழினத்தைக் காட்டிக் கொடுத்து அழிப்பாரும், தமிழ்மொழி வழிபாடு ஆட்சி முறை இசை என எவற்றிலும் தலை யெடுக்காமல் தொடர்ந்து கேடு செய்வாரும் மாற்றார் அல்லாமல் ஏற்றார் ஆகார்!

உண்ண உடுக்க உறைய உதவியெல்லாம் பெறவாய்த்த இந்த மண்ணுக்குத் துளியளவும் நன்றியில்லாது கெடுக்கும் பிறவியர் எவரெனினும் அவரெல்லாம் மாற்றாரே! அவர்க்கு இடம் தந்து கெட்டதும் இழந்ததும் போதும்! ஏதாவது சிறிது இருந்தால், அதனையாவது இழக்காமல் இருப்பதற்கு, இடம் தராதே என்னும் மணிமொழி, இக்காலத்துக்கும் எக்காலத்துக்கும் ஏற்ற மணி மொழி

"மாற்றானுக்கு இடம் கொடேல்"

என்பதாம்!

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

❖❖❖



திருமிகு பாலம்மாள் குமரசாமி அறக்கட்டளையர்

(இடமிருந்து) திருவாட்டி இலட்சுமி

கு. தாமோதரன்

திருவாட்டி பா. உஷா